விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 12 ஐ. ஆ. 14 இதழ் 14
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-2-1986

UNIVERSITY OF JAFFNA RECEIVED 25-2-1986 PERIODICALS DIVISION LIBRARY

## விமானக்குண்டு வீச்சை நிறுத்துமாறு கோரிக்கை

(புலோலி)

விமானத்திலிருந்து குண்டு வீசி அப்பாவி குடிமக்களைக் கொல்லும் மனித விரோத நடவடிக்கையை நிறுத்த உடனடி உத்தரவு பிறப்பிக்குமாறு பருத்தித்துறை பிரஜைகள் குழு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைக் கேட்டுள்ளது.

இதுசம்பந்தமாக பருத்தித்துறை பிரஜைகள்குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கத்தால் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது;-

''அப்பாவிக்குடிமக்கள், விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் வாழும் பகுதிகளில் அண்மைக்காலங்களில்; பயங்கரக் காட்டு மிருகங்கள் வாழும் பகுதிகளில் குண்டுவீசி அம்மிருகங்களைக் கொல்வதுபோல் குண்டு வீசி மக்களைக் கொல்வதால் இந்நாட்டுத் தமிழ்மக்களை அரசு வேண்டாத பிறவிகளாகக் கணிப்பதாகப் பருத்தித்துறை பிரஜைகள்குழு மிக மனவருத்தத்துடன் நோக்குவதுடன் உடனடியாக இம்மனிதவிரோதகுண்டு வீசிக்கொல்லும் நடவடிக்கைகளை நிறுத்த ஆவனசெய்ய வேண்டும்.''

## சுவிஸ் இலங்கையர்: வடக்கு, கிழக்கு தமிழருக்கு விதிவிலக்கு?

(கொழும்பு)

''சுவிற்ஸர்லாந்தில் அரசியல் புகலிடம் தேடியுள்ள இலங்கையர்களை மீண்டும் திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு தீர்மானிக்கும் பட்சத்தில், இலங்கையின் வட, கிழக்குப் பகுதிகளிலிருந்து வந்தவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும்.''

தமிழர் பிரச்னை குறித்த ஆராய்வில் நெடுங்காலமாக ஈடுபட்டுள்ளவரும், சுவிஸ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வெளிநாட்டுத்துறைப் பிரிவில் பணியாற்றுபவருமான டாக்டர் றுடோல்ட் பேர்கர் நேற்று கொழும்பு வந்தபோது மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்க, மற்றும் தமிழர் பிரதிநிதிகளைச் சந்திப்பதும், சுவிற்ஸர்லாந்தில் அரசியல் புகலிடம் கோரியுள்ளவர்களின் கோரிக்கைகளின் நியாய அநியாயங்கள் பற்றி அறிவதுமே தமது விஜயத்தின் முக்கிய நோக்கம் என்று டாக்டர் பேர்கர் தெரிவித்தார்.

இவர் கலாநிதி நீலன் திருச்செல்வம், அமைச்சர் திரு. லலித் அத்து

(5-ம் பக்கம் பார்க்க

# இனப் பிரச்னை: அரசுக்கு அக்கறையில்லை!

# தனிநாடு தவிர வேறுவழியில்லை!

## ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக கருத்தரங்கில் 'சிவா'

(லண்டனிலிருந்து நமது நிருபர் மாலி)

''இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த பிரேரணைகளைக் கரிசனையுடன் பரிசிலனை செய்வதில் இலங்கை அரசுக்கு அக்கறை இல்லை. இப் பிரேரணைகளை இலங்கை அரசு அலட்சியம் செய்யும் பட்சத்தில், 1977-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டு அதற்கான மக்கள் ஆணையையும் பெறப்பட்ட தனித் தமிழ்நாட்டினை நிறுவும் இலட்சியத்தினை நிறைவேற்றுவதைத் தவிர எமக்கு வேறுவழி கிடையாது''

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினால் 'கொந்தளிக்கும் தீவு' என்ற தலைப்பின்கீழ் லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

[5-ம் பக்கம் பார்க்க]

## விவசாயிகள்மீது ஹெலிகொப்டர் தாக்கு

(வவனியா)

வவனியாவிலுள்ள சமலன்குளம் என்ற இடத்தில் நடந்த சனிக்கிழமை பகல் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இப்பகுதியிலுள்ள விவசாயிகள் வயலில் அறுவடைசெய்து கொண்டிருந்தபோது ஹெலிகொப்டர்மூலம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், மக்கள் நாளாபக்கமும் சிதறி ஓடினர் என்றும் எவருக்கும் எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றும் அறியப்படுகிறது.

## 'ட்ரக்' உரிமையாளர் சூட்டுக்குப் பலி!

(மட்டக்களப்பு)

தனியாருக்குச் சொந்தமான 'ட்ரக்' ஒன்றை சிலர் கடத்திச் செல்ல முயன்றார்கள். அதனைத் தடுக்க எத்தனிக்க உரிமையாளர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

[5ம் பக்கம் பார்க்க]

## முரசுமோட்டை வயல்களில் 'கறுப்புச்சட்டை'க்காரரினால் 25 விவசாயிகள் கைது!

[கிளிநொச்சி]

முரசுமோட்டை பகுதியில் வயல்களில் வேலையிலீடுபட்டிருந்த சுமார் 26 விவசாயிகள் நேற்று முன்தினம் 'கறுப்புச் சட்டை'படையினரால் கைதாகியுள்ளனர்

பரந்தனில் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களை இவர்கள் தீர்த்ததால் இப்பகுதியில் பெரும்பதற்றம் உருவாகியது.

பலர் இச்சம்பவத்தால் காயமடைந்திருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

முரசுமோட்டையிலு வயல்களில் கைதான விவசாயிகள் மூன்று ட்ராக்டர்களில் ஏற்

(5ம் பக்கம் பார்க்க)

## விவசாயிகள் படுகொலை: பிரஜைகள்குழு நடவடிக்கை

[கொழும்பு]

விவசாயிகள் வயலில் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக சாட்சிகளிடம் சத்தியக் கடுதாசி பெறும் பொருட்டு மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினர் இன்று அக்கரைப்பற்றுக்கு செல்லவிருக்கின்றனர்.

இச் சம்பவம் தொடர்பான முழு விசாரணைகளையும் மட்டக்களப்பு பிரஜைகள் குழு [illegible] ஏற்பாடுசெய்து வருகின்றனர்.

## இணைப்பதிகாரி - பிரஜைகள் குழு இன்று சந்திப்பு

[கிளிநொச்சி]

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் கிளிநொச்சி பிரஜைகள் குழு இன்று திங்கட்கிழமை காலை இராணுவ முகாம் சென்று இணைப்பதிகாரி கேர்ணல் [illegible]

[5ம் பக்கம் பார்க்க]

பிரயாண ஒழுங்கு

டென்மார்க்

செல்வதற்கு பிரயாண ஒழுங்குகள்

உடன் தொடர்புகொள்ளவும்:

க. திருநாமம்,

4-ம் குறுக்குத் தெரு,

சென். அந்தனீஸ் லேன், பருத்தித்துறை.

(C 909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

நெல்லை க. பேரனின் முதற் பரிசுபெற்ற ''விமானங்கள் மீண்டும் வரும்'' குறுநாவல் இப்போது யாழ்ப்பாணத்தில் சகல புத்தகக் கடைகளிலும் விற்பனையாகிறது. பிரதி ரூ. 9-50 சதம் மட்டும். [C 459]

எட்டுமுழப் பனைமரங்களும், சிலாகைகளும், வேப்பமரக்குற்றிகளும் மொத்தமாக விற்பனைக்குண்டு. பிற்பகல் இரண்டு மணிக்குமேல் தினமும் பார்வையிடலாம். பொன்மலர் ஸ்ரோர்ஸ், அளவெட்டி. [C 896]

பூரண விளைத்திறனுடைய புதிய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257. காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் [C 911]

FARMகோழி சாணப்பசளை விற்பனைக்குண்டு. தொடர்பு NO 12 எம்மோ ரேலன், சோனக தெரு, யாழ்ப்பாணம். C 924

## தேவை

வொச்ஸ் வகன் 1200, 1300 தேவை. தொடர்பு கொள்ளவும். ஆர். ராஜநாயகம் C/O சுலைமான்கண்டு அன்பிறதர்ஸ், 5-7, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (C 899)

## மணப்பந்தல்

35 வயதுடைய இந்து மதத்தைச் சேர்ந்த விவசாயப்பகுதியில் (K. V. S.) தொழில் புரியும் செவ்வாய் குற்றமற்ற பெண்ணுக்கு மணமகன் தேவை. வீடு வளவு தகுந்த சீதனம் கொடுக்கப்படும். சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்க விளம்பர இல: C 921, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 921]

இந்து வேளாள குல பெற்றோர் வெளிநாட்டில் தொழில் புரியும் 37 வயதுடைய மகனுக்கு 30-32 வயதுடைய அழகிய, ஆங்கில அறிவுடைய மணமகளைத் தேடுகிறார்கள். வெளிநாடு போகக்கூடியவராக இருத்தல் வேண்டும். குறிப்புடன் புகைப்படமும் முதல் கடிதத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல; C 923 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். [C 923]

## வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ and ரீ. வி. மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைன்டிங், ரேடியோ and எலக்ரோனிக், Short Hand Typing புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. கட்டணம் மிகக் குறைவு. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 873

## MATRIMONIAL

Well connected Jaffna Tamil Catholic parents seek suitable partners for their 32 years old fair complexioned pretty daughter holding a responsible position in a leading International Airline Office and for their 28 year old son employed in a leading British Bank. Confidentiality Guaranteed. Not NecessarilyIntermarriage. Adv. No C 914, C/o., Eelanadu, Jaffna. (C 914)


## ஆட்சிக் குழு கூட்டம்

(வேலணை)

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் 24-ம் திகதி இன்று திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் ஸ்ரேசன் வீதியில் திரு. பொன். பூலோகசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் அ. செல்லப்பா
(பிள்ளையார்)
அச்சாரியார் அவர்கள்



மலர்வு: 8- 8- 1922
உதிர்வு: 6- 3- 1985
திதி: 24- 2- 1986

எங்கள் குடும்பக் கோயிலிலே ஒளிவீசி ஒளிவிளக்காகத் திகழ்ந்து எல்லோரினதும் பேரன்பைப் பெற்று இறைவன் பாதநிழலை அடைந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து ஓராண்டாகிலும் உங்கள் நினைவு எங்கள் உடல் அழியுமட்டும் நிழலாடிக்கொண்டே இருக்கும். ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.
சுற்றத்தார்,
நண்பர்கள்.
மயிலிட்டி வடக்கு,
மயிலிட்டி. [C 917]

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



செல்வி பாத்திமாறிஸ்னு

யாழ்ப்பாணம் பு. லெப்பை லேனைச் சேர்ந்த முகிதீன் அனீஸா தம்பதிகளின் அருமைப் புதல்வி பாத்திமா றிஸ்னு தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (24-2-86) தனதில்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை வாப்பா, உம்மா, வாப்பம்மா, உம்மம்மா, அப்பா, பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், மாமாமார்கள், மாமிமார்கள், மச்சான்மார்கள், மச்சிமார்கள், காக்காமார்கள், ராத்தாமார்கள், தங்கச்சி, கொழும்பு அப்பா குடும்பத்தினர் ஆகியோரும் அல்லாஹ்வின் இறையருளால் பல்லாண்டு காலம் நலமுடன்வாழ வாழ்த்துகிறார்கள்; C 912

## முதற்சம்பத்து முற்றான கட்டளையின் அறிவித்தல்

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி நல்லதம்பி சிவபூஷணம் என்பவரின் கூட்டு மரண சாதனம் சம்பந்தமாகக் குடியியல் நடைமுறைச் சட்டம் 525ம் பிரிவிற்கமைவாக செய்யப்படும் விண்ணப்பம்.

— மரணமெய்தியவர்.

வழக்குஇலக்கம்: 241/தத்துவம்

அத்துடன்
மாப்பாணர் நல்லதம்பி,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

— மனுதார்.

மேற் பேரிட்ட காலஞ்சென்ற நல்லதம்பி சிவபூஷணம் ஆகியவரின் கூட்டு மரண சாதனத்தின் நிருபணத்திற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் முதற் சந்தர்ப்பத்து முற்றான கட்டளை 1986ம் ஆண்டு மாசி மாதம் 17ந் திகதி பிறப்பிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1986ம் ஆண்டு மாசி மாதம் 20ந் திகதியாகிய இன்று

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆ. குணநாயகம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

தயாரித்தவர்:
எஸ்.கே.திரவியநாயகம்
மனுதாரின் சட்டத்தரணி.
[C888]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி மேறி திரவியம் விஸ்வலிங்கம் என்பவரின் மரணசாதனம் விடயத்தில்

மரணமெய்தியவர்

வைத்திய கலாநிதி பிலிப் குணசிங்கம் விஸ்வலிங்கம், ஆஸ்பத்திரி வீதி, சாவகச்சேரி.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 224

எதிராக

கிறிஷான்று பிஞேஜன் விஸ்வலிங்கம் ஆஸ்பத்திரி வீதி, சாவகச்சேரி, தற்போது கிறிஸ்தவ மருத்துவக்கல்லூரி, வேலூர், தென் இந்தியா

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 23-ம் திகதி தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை 1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ம் திகதி பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 19-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986-ம் ஆண்டு மாசி மாதம் 20-ம் திகதியாகிய இன்று
நீதிமன்றக் கட்டளைப்படி

ஆ. குணநாயகம்,
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

தயாரித்தவர்
எஸ். கே. திரவியநாயகம்
மனுதாரின் சட்டத்தரணி.
C 887

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்




வல்லிபுரம் சதாசிவம்
(இலங்கை கடற்படை
திருகோணமலை)

மலர்வு: 1947-8-23
உதிர்வு: 25-1-1986

எங்கள் குடும்பத்தில் குலவிளக்காய் இருந்து திடீரென எம்மை விட்டுப் பிரிந்துவிட்ட எங்கள் அன்புத்தெய்வமே! நிச்சயம் எமது கனவில் உறவாடி, ஆறுதல்கூற வாறீரோ! தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்கு கண்ணீர்ப்பூக்களால் அர்ச்சனை செய்கின்றோம். அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 24-2-86ல் அவரது இல்லத்தில் நடைபெறும் இக்கிரியைகளில் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன். அன்னாரின் மரணச்சடங்கில் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மற்றும் அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படிக்கு
மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்,மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.
அச்செழுவடக்கு,
நீர்வேலி. C 927

## 1-ம் வருட நினைவஞ்சலி



அல்பேட் யேசுதாசன்
(பபா)
பிறப்பு: 20- 07- 1939
இறப்பு: 24- 02- 1985

உயிருள்ளவரை எம்மை நேசித்தாய்.
உதிர்ந்தபின் உன்னை மறவோம்.
தங்கள் நிழலில்வாழ்ந்த எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு சிலுவை சுமந்த யேசுவின் பாதத்தை நாடியே நீரும் விரைந்து சென்றீரோ? நாளெல்லாம் நாம் கலங்குகின்றோம் எமது நாயகமே.

எங்கள் நன்மைக்காய் வாழ்ந்த தங்கள் இலட்சியங்கள் ஈடேற நாளெல்லாம் உழைப்போம் நாம்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக எதிர்வரும் 24-02-86 திங்கட்கிழமை காலை 5-30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால்
துயருறும்:
தாய், பிள்ளைகள்,
சகோதரர்.
செபஸ்தியார் வீதி
மன்னார். [C 843]


## ஓர் நற்செய்தி




மில்க்வைற் பார்சோப்

| | பழைய விலை ரூபா-சதம் | புதிய விலை ரூபா-சதம் |
|---|---|---|
| முழு பார்சோப் | 14-00 | 13-00 |
| அரை பார்சோப் | 7-00 | 6-50 |
| மினி பார்சோப் | 3-50 | 3-00 |

2 பார்சோப் மேலுறைகளை அனுப்பி ஒரு யோகாசன ஸ்ரிக்கரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்- யாழ்ப்பாணம்.

A-278


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவி

## அக்கினேவ் தலைமறைவு!

(மணிலா)

**பிலிப்பைன்ஸ் நாட்டு எதிர்க்கட்சித்தலைவி திருமதி அக்கினேவ் தலைமறைவாகியுள்ளார்.**

**அதிபர் மார்கோஷின் அரசினுல் தாம் கைது செய்யப்படலாம் என்று கூறப்பட்டதைத் தொடர்ந்தே இவர் தலைமறைவாகியுள்ளதாக கூறப்பட்டது.**

தலைமறைவாகியுள்ள திருமதி அக்கினேவ் பாதுகாப்பான ஓர் இடத்தில் சகல வசதிகளுடனும் தங்கியுள்ளதாக அவரின் முக்கியப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிலிப்பைன்ஸ் நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு இவான் பொன்ஸ் ஹென்றிலி, இராணுவ படைகளின் துணைத்தளபதி ஜெனரல் ரொமாய் ஆகிய இருவரும் இதுவரை அதிபர் மார்க்கோஸிக்கு அளித்து வந்த ஆதரவிலிருந்து விலகிக் கொள்வதுடன், திருமதி அக்கினேவின் அதிபர் பதவியை ஆதரிப்பதாகவும் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக நேற்று பிலிப்பைன்ஸ் நாட்டு டெலிவிஷனில் கருத்து வெளியிட்ட அதிபர் மார்கோஸ் திரு ஹென்றிலியும், ஜெனரல் ஹாமாயும் தம்மை கொலை செய்து அரசை கைப்பற்றத் திட்டம் தீட்டியிருந்ததாகவும். இந்த சதியை தமது மகன் தக்க தருணத்தில் கண்டுப் பிடித்துவிட்டார் என்றும் கூறினர்.

உலகச் செய்திகள்

இந்தக் குற்றச்சாட்டை திரு ஹென்றிலி மறுத்துள்ள அதேவேளை இன்னுமொரு சம்பவமாக பிலிப்பைன்ஸ் நாட்டுத்தலைமை தபால் அதிகாரியான திரு நீலா கொலாஸ் தாம் மார்கோஸ் அரசிலிருந்து விலகிக்கொள்ளப் போவதாக கூறியுள்ளார். [ரா]

## மனன எழுத்துப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பண்ணுகம் விசவத்தனை சந்தசாமி கோவில் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பிள்ளைத் தமிழ் வெளியீட்டுச்சபை திருமுருகாற்றுப்படை மனனப் போட்டியும், பிள்ளைத் தமிழ் அறிவு எழுத்து போட்டியும் நடாத்தவுள்ளது.

அடுத்தமாதம் 9 ம் திகதி ஞாயிறு காலை பண்ணுகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

## "இலங்கைத் தமிழ் அகதிகள் கண்ணியத்துடன்நாடுதிரும்ப நடவடிக்கை எடுக்கப்படும்!"

### மத்திய அமைச்சர் அருண்நேருகருத்து

பெப் 23 - புதுடில்லி

"இலங்கைத் தமிழ் அகதிகள் கண்ணியத்துடனும், கௌரவத்துடனும் தமது தாய் நாடு திரும்பும் நிலை விரைவில் தோற்றுவிக்கப்படும்,' என்று இந்திய உள் நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு அருண் நேரு கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற மாநில அரசுகளின் மறுவாழ்வுத்துறை அமைச்சர்கள் மகாநாட்டிலேயே திரு அருண் நேரு இதனைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகளை குடியமர்த்துவதற்கும் மறுவாழ்வு தருவதற்கும் காலக்கெடுவுடன் கூடிய திட்டமொன்றை வரைந்து செயல்படுத்த வேண்டும் என்று அங்கு கூறிய திரு நேரு அகதிகளுக்கும், பாரதத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கும் மறு வாழ்வு தரும் பணி ஏறத்தாள நிறைவுபெற்றுவிட்டது. எனினும் எஞ்சியுள்ள சில பணிகளை உடனடியாக செய்ய வேண்டியுள்ளது என்றும் கூறினர். [ரா]

## "இரத்தம் பெருக அவர் கீழே விழுந்தார்!"

[மாவிட்டபுரம்]

ஊறணியில் இராணுவத்தினரின் துப்பாக்கிவேட்டுக்குப் பலியானவரின் மரணவிசாரணையில் கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டு சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இறந்தவரின் மைத்துனர் நாகமுத்து சின்னராஜா சாட்சியமளிக்கையில், "இராணுவம் வருவதையறிந்து பயத்துடன் இருந்த இறந்தவரை அவரின் வீட்டில்வைத்து இராணுவத்தினர் சுட்டனர். இரத்தம் பெருக அவர் கீழே விழுந்தார்" என்று விபரித்தார்.

ஊறணி புனித அந்தோனியார் கோவிலடியைச் சேர்ந்த கணபதி முத்தன் [54] என்பவர் நடைபவனி வந்த இராணுவத்தினரால் நேற்றுமுன்தினம் நண்பகல் சுடப்பட்டு மரணமானது தெரிந்ததே.

இவரது மரணம் குறித்து திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். சித்திரவேல் மல்லாகம் மாவட்ட நீதிபதியின் பேரில் விசாரணை நடத்தினார்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை சாட்சியம

[7-ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்தியா-ஒரிஸா மாநிலத்தில் மயூர்ப்பாந் காட்டில் வங்கப்புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாம். 1972ம் ஆண்டில் 17 ஆக இருந்த இந்த எண்ணிக்கை 1984ம் ஆண்டு 81 ஆக அதிகரித்துள்ளதாம்.

## "பரந்த அறிவும் தார்மீகத் துணிவும் கொண்டவர் கிருஷ்ணமூர்த்தி"

### இந்தியப் பிரதமர் புகழஞ்சலி

[புதுடில்லி]

"பரந்த அறிவாற்றலும், தார்மீகத் துணிவும்கொண்ட ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒருபோதும் தன்னை ஒரு குருவாகப் பாவனைசெய்யவில்லை. ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளே தானே ஒளியைத் தேடிக்கொள்ளவேண்டும் என்று கருதினர்."

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி, தத்துவ ஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி மறைவையொட்டி விடுத்த இரங்கல் செய்தியில் கூறினர்.

20ம் நூற்றுண்டில் தத்துவ ஞானி என வர்ணிக்கப்பட்ட ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி தனது 90வது வயதில் கலிபோர்னியாவில் புற்றுநோய் காரணமாக காலமானதுதெரிந்ததே.

நாற்பதுக்கும் அதிகமான தத்துவப் புத்தகங்களை எழுதி உலகுக்களித்துள்ள இவர் இலகுவில் வரையறுக்கமுடியாத ஆழமான கவிஞன் என்றும் போற்றப்பட்டார்

இவரின் பெயரில் உருவாக்கப்பட்ட சர்வதேச நிறுவனங்கள் ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளில் இயங்கி வருகின்றன.

"நான் என்றுமே பார்த்திராத அழகான மனிதர்" என்று பிரபல நாடக ஆசிரியரான ஜோர்ஜ் பேர்ணட் ஷா இவரை ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தத்துவஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி சுயமாக அறிவு படைத்தவராகவும், மனிதப் பிரச்சினைகளுக்கு உண்மையான விளக்கமளிப்பவராகவும் சமயரீதியான கற்பனை சக்தி நிறைந்ததழுவல் களப்பின்பற்றுதவராகவும் திகழ்ந்தவர்.

'பிரேவ் நியூ வேல்ட்' என்னும் பிரிட்டிஷ் புத்தகத்தின் ஆசிரியர், "புத்தரின் பிரசங்கம் ஒன்றை எப்படி நாம் கேட்டுப் பிரதிவாதம் புரிய முடியாதோ அப்படி முக்கியத்துவமும், சக்தியும் வாய்ந்தது கிருஷ்ணமூர்த்தியின் பேச்சு" என்று கூறியுள்ளார்.

ஜிட்டு, கிருஷ்ணமூர்த்தி தனது வாழ்நாளில் பெரும் பகுதியை விரிவுரைகளை நிகழ்த்தியும் தத்துவப் புத்தகங்களை எழுதியும் மக்களின் பாராட்டைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (பி)

## ஆனையிறவு தடைமுகாமில் கடும் சோதனை

[கிளிநொச்சி]

ஆனையிறவு இராணுவ முகாமிலுள்ள தடைமுகாமில் வாகனங்கள் பிரயாணிகள் மிகவும் கடுமையான சோதனைக்கு ஆளாக்கப்பட்டனர்.

இதனுல் போக்குவரத்து பலமணிநேரம் தாமதமாகிறது. கடந்த 21-ம் திகதி காலை 5 மணிமுதல் மாலை வரை இச்சோதனை என்றும் இல்லாதவகையில் நடைபெற்றது.

காலையில் தடைமுகாமை அடைந்த வாகனங்கள் ஒவ்வொன்றுக மிகவும் நுணுக்கமான சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

லொறிகள் மற்றும் வாகனங்களில் உள்ள சாமான்கள் அனைத்தும் கீழ் இறக்கப்பட்டு சோதிக்கப்பட்டது ஒரு வாகனத்தின் சோதனை முடிவடைய இருமணி நேரத்திற்கு மேல் சென்றது.

காலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் இடங்களில் இருந்து புறப்பட்ட சகல இ போ. ச. பஸ்களும் ஆனையிறவு தடைமுகாமில் நண்பகல் 11 மணிவரை எவ்வித சோதனையும் மேற்கொள்ளப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட இ போ. ச. பஸ் வண்டிகள் 11 மணிக்குப்பின்சோதனை செய்யப்பட்டு போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பக்கமாக புறப்பட்ட வாகனங்களின் நீண்டகியூ வரிசை யக்கச்சி வரை சென்றது. இதேபோல் கிளிநொச்சிப் பக்கமிருந்து புறப்பட்ட வாகனக்கியூவரிசை பரந்தன்வரை இருந்தது

பல வாகனங்கள் ஆனையிறவால் போக்குவரத்துச் செய்ய முடியாதநிலையில் வந்த பாதைகளால் திரும்பச் சென்றது இதன் எதிரொலியாக மட்டக்களப்பு முதலான நீண்டதூரப் போக்குவரத்து வாகனங்கள் பிரயாணிகளுடன் முறுகண்டியில் தரித்துநின்று பொழுதைக் கழித்தன.

இச்சோதனை தொடருமானல் கொழும்பு முதலான தூர இடங்களில் இருந்து வடபகுதிக்கான உணவு மற்றும் பொருள்வரவும் போக்குவரத்தும் சீர்குலையும் எனவும் அஞ்சப்படுகிறது.

இதேவேளை பல மரம்ஏற்றி யாழ்ப்பாணம் செல்லவிருந்த லொறிகளையும் மரங்களுடன் இராணுவம் தடைமுகாமில் கைப்பற்றியதாகவும் தெரிகிறது. மேற்படி சோதனைகளை பொலிசாரே மேற்கொண்டிருந்த அதேவேளை வீதியில் இராணுவக் காவலும் பலப்படுத்தப்பட்டிருந்தது

கொழும்பில் இருந்து யாழ் சென்ற இன்ரசிற்றி றெயிலும் ஆனையிறவில் சோதனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## இளைஞர் பலி!

[யாழ்ப்பாணம்]

அடையாளம் காணப்படாத இளைஞரின் சடலம் ஒன்று யாழ் ஆஸ்பத்திரியில் பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டு, பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இறந்தவர் நேற்று முன்தினமிரவு யாழ் பொலிஸ் நிலையம் நோக்கி வந்தபோது சுடப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இறந்தவர் சாக்லட் நிற சேட்டும், கோடுகள் போட்ட சாரமும் அணிந்திருந்தார், உடல் எங்கும் இரத்தக் கறைகள் காய்ந்த நிலையில் காணப்பட்டன.

பொலிசார் மரண விசாரணைக்கான ஏற்பாட்டை செய்துள்ளனர். (க)

## விமானக்குண்டு தாக்குதல்:

## பிரஜைகள்குழு தீர்மானத்தில் முக்கிய இடம்பெறலாம்!

[யாழ்ப்பாணம்]

பத்து லட்சம் கையெழுத்துடன் இணைத்து அனுப்பப்படும் பிரஜைகள்குழு இணைப்புக் குழு தீர்மானத்தில் போர் விமான குண்டுத்தாக்குதலை நிறுத்துமாறு கோரும் தீர்மானம் முக்கியஇடத்தை பெறும் எனக் கூறப்படுகிறது

பத்து லட்சம் கையெழுத்துடன் அனுப்பும் தீர்மானம் பற்றி ஆராய்ந்து முடிவுசெய்வதற்காக, இம்மாதம் 26-ம் திகதி பிற்பகல் நல்லூர் இந்து விடுதியில் பிரஜைகள் குழுவின் இணைப்பு குழுவினர் கூடுகின்றனர்.

"விமானக் குண்டுத் தாக்குதல்" முக்கிய இடம்பெறவேண்டும் என்று கோரப்படுவதாக பிரஜைகள் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது, எல்லா ஆபத்திலும் பார்க்க மிக மோசமானது 'விமானக் குண்டுத் தாக்குதல்' என்று அவர் தெரிவித்தார். [க]

## கோப்பாய் வைத்தியசாலைக்கு புதிய டாக்டர்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆறு மாத காலமாக வைத்திய அதிகாரி இல்லாமல் இயங்கி வந்த கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரியாக இருந்த டாக்டர் பி. நவரத்தினராசா நியமிக்கப்பட்டுள்ளார். [ஐ]

## விவசாயக் கடன் கூட்டம்

(வவனியா)

எதிர் வரும் 25ம் திகதி பிற்பகல் வவனியா தமிழ் பிரிவு கூட்டுறவு சமாஜத்தில் விவசாயக் கடன் தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வருங்காலத்தில் கலைப்படைப்பு எல்லாமக்களுக்கும் உரியதாகஇருக்கும். எனவேஅதுதெளிவு, எளிமை, சுருக்கம் ஆகிய அம்சங்களைக் கொண்டதாக இருக்கும்.

— டால்ஸ்டாய்.

## நமது நோக்கு

# இன்னொரு பயங்கரபகைவன்

அக்கரைப்பற்றின் உடும்பன் குளப்பகுதியிலும், ஆகாயவிமானப் போரிலும் கவலைகொண்ட மக்களுக்கு சுகாதார, அறிவுரை எத்துணை அவசியமானதானுலும் மனதைக் கவர வல்லதோ என்ற ஐயம் எமது பேனுவை பிடித்திமுக்கிறது.

இன்றைய கொலைகள் நிச்சயம் முடிவடையும் வெறும் தேற்றமல்ல விழித்துக் கொள்ளும் காலம் வந்துவிட்டதால் 'மண்ணை ஆண்டவர் மண்ணிலும் கோடி' என்பதை ஆட்சிக்குப் பொறுப்பானவர் அனைவருக்கும் குறிப்பாக பாதுகாப்பு அமைச்சருக்கும் நினைவூட்டுகின்றேம்.

நாம் இங்கு குறிப்பிடுவது மறைமுகமாக இருந்து மர்மத்தில் மர்மமான வழியில் மக்களைத் தாக்கும் புற்றுநோய் பற்றியே

இதனை இன்று 'கர்மநோய்' என்று சொல்லும் பேர் அனேகர் இருந்தாலும் இதன் தாக்கம் எங்கும், இந்நாட்டிலும் குறிப்பாக வடக்கிலும் அதிகரித்து வருவதால் மக்கள் மனப்போக்கில் மாற்றம் ஏற்படுவது மிக அவசியமானது

இன்றுதான் இதுபற்றி நாம் எழுத முயலவில்லை. யாழ்ப்பாணத்தின் பொதுநலத் தொண்டர்கள் பலர், பெருமனம் படைத்த வள்ளல்கள் பலர் எடுத்த முயற்சியே தெல்லிப்பழையில் பெருஞ்செலவில் வடமாகாண புற்றுநோய்ச் சங்கம் கட்டி எழுப்பிய ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஞாபகார்த்த புற்றுநோய் மருத்துவமனை

அது இன்று மூர்த்தியும் தீர்த்தமுமில்லாத தலம் என்பதை நாம் எங்கள் தோல்விகளுடன் சேர்த்துக் கணக்கிடவேண்டும்.

நோயாளிக்கு சிகிச்சையளிக்கும் வைத்திய நிபுணர் இல்லாததால் அங்கு நிறுவப்பட்ட மிக அத்தியாவசியமான உபகரணங்களும் நீக்கப்பட்ட நிலையில் வெட்டவெளியே நோயாளிகளின் தஞ்சம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

உலகெங்கிலும் சேவை செய்யும் தமிழ் வைத்திய நிபுணர்கள் எவராவது இந்தக் குறையைத் தீர்க்க முன்வந்ததாகவோ அல்லது முயற்சி செய்ததாகவோ நாம் கேள்விப்படவில்லை.

நாம் நாம் தப்பிக்கொள்வோம் என்ற சுயநலப் போக்கு எங்கள் சமுதாயத்தில் பரவலாகக் காணப்படுவதால் நாம் என்றும் காணுத தியாகத்தையும், வீரத்தையும் இன்று கண்டபோதும் இவ்வித குறைபாடுகள் இலகுவில் குறைந்து போவதில்லை.

இன்றைய நிலையில் வளர்ச்சியடையும் நாடுகளில் இந்த நோய் உடம்பில் காணப்படும் புதிய வளர்ச்சிகளில் 55 சதவீதம் ஆண்களிலும், 45 சதவீதம் பெண்களிலும் புற்றுநோயால் ஏற்படும் மரணமென புள்ளி விபரங்கள் விளக்குகின்றன.

இது யாரையும் தாக்கும் மரணத்துக்குமுன் எல்லோரும் சமம் என்ற மாதிரி உலகம் போற்றும் உத்தம ஞானிகளையும் அரசியல் தலைவர்களையும் அதே சமயம சாதாரணஏழைஉழைப்பாளிகளையும் பலியெடுக்க வல்லது.

அண்மையில் மறைந்த ஆத்மஞானி கிருஷ்ணமூர்த்தி தமது 90வது வயதில் சடாரென இதற்குப்பலியாஞர். தென்னுட்டுத் தலைவர் அண்ணுவுக்கு அமெரிக்க நவீன சிகிச்சை அளித்த போதும், அவர் தப்பமுடியவில்லை. அண்மையில் இந்நோயினுல் பாதிக்கப்பட்டவர் அமெரிக்க ஜனதிபதி றீகன் என்று கருதிய மருத்துவ நிபுணர் காலதாமதமின்றி அளித்த அற்புத சிகிச்சையால் அவர் தப்ப முடிந்தது.

நோயின் காரணம் என்ன என்பதை திட்டவட்டமாக அறியாத போதும், அதனை இனங்காணும் வல்லமை நோய் ஆரம்பத்தில் கிட்டாத போதும், இன்றைய மருத்துவ ஆராய்ச்சி ஓய்வின்றி இத்துறையில் படிப்படியாக முன்னேற்றமடைகிறது

இதனைப் பொதுமக்கள் நன்கு அறியவேண்டும் என்ற நோக்கத்துடன் வடமாகாண புற்றுநோய்ச் சங்கம் 'புற்றுநோய்' என்ற மிகத்தெளிவான, சுருக்கமான நூலொன்றை எளிமையான நடையில் எழுதிப் பிரசுரித்திருக்கிறது.

புற்றுநோய் பற்றிய தவருன தகவல்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதோடு நாம் இந்த நோயை எவ்வாறு தடுக்கலாம், எவ்வாறு அறியலாம் என்ற அறிவுரை இந்நூலின் மிகமுக்கிய அம்சங்களாகும்.

இன்று மருத்துவ வசதியில்லாது அதே சமயம் மாற்றமுடியாதென்ற நிலையில் பரிதவிக்கும் நோயாளிகளைப் பராமரித்து நோயின் தாக்கங்களுக்கு தற்காலிக வைத்தியமளிக்கும் விடுதி ஒன்றைக்கட்ட இச் சங்கம் திட்டமிட்டிருக்கிறது.

பதினுன்கு பரப்புக் காணியை வழங்கிய வள்ளலின் தொண்டைத்தொடக்கமாகக்கொண்டு பொதுமக்களின் நன்கொடையை கட்டிடம் அமைக்க இச்சங்கம் கோரிநிற்கின்றது.

நாம் முன்னர் கூறியது போல நூல் சிறிதென்ருலும் அதன் பயன் பெரிது; அதனை உணரும் மக்கள் இந்தக் கைங்கரியத்துக்கும் உதவுவதோடு, இச்சங்கத்தின் சேவைக்கு நன்றி பாராட்டவேண்டும்.

★ உலக அரசியல் அரங்கு — அரசியல் அவதானி

# மூன்றும் உலக நாடுகளுக்கு ஒருபுதுவித "ஜனநாயகம்" உருவாகிறதா?

## பிலிப்பைன்ஸில் இன்றுநிகழும் மாற்றம்இதற்கு அறிகுறி?

### இந்திய உபகண்டத்தில் நிலவும் பலவித தொல்லைகள் மத்தியில் மக்கள் ஆட்சி பலமுறுவதை யாரால் ஆட்சேபிக்க முடியும்?

## புதுடில்லி

ஆன்மபலத்துக்கு அடிகோலிய ஞானிகள் பிறந்த இடம் பாரதம்; இன்று இதனை நேரில் கண்ட பாப்பரசரும் இங்கிலாந்தின் ஆன்மிகத்தலைவர் கன்டபரி ஆர்ச்பிஷப் டாக்டர் ரான்சியும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதேசமயம் மதத்தால் மனிதன் மிருகம்போல் நடத்தும் வகுப்புவாத இனக்குரோதவன் செயல்களும் என்றும் குறைந்தபாடில்லை. இந்திய இதிகாச புருஷர் ஸ்ரீ ராமன் பிறந்த அயோத்தியில் பல வருடங்களாக பூட்டப் பட்டிருந்த 'ராமஜென்ம பூமிகோவில்' பலவருடங்களுக்குப் பின் நீதிமன்ற உத்தரவில் திறக்கப் 'பட்டதும், உத்தர பிரதேசம் மத்திய பிரதேசம், வாரணுசி, டில்லி, ஜம்முகாஷ்மீர்போன்ற முஸ்லிங்கள் பெருமளவில் வாழுமிடங்களில் அதுதங்கள் கோவில் என்று உரிமைகோரி பயங்கர செயல்கள் நடைபெற்றன.

வடக்கில் காசிமாநகரில் உள்ள விஸ்வநாதர்ஆலயமும், தெற்கில் ராமேஸ்வரமும் இந்திய பாரதப்பண்பாட்டின் ஒருமையின் உயர்ந்த சின்னங்கள் இன்று ராமாயணத்தின் கதாநாயகன் பிறந்த இல்லம் யாருக்குரியது? இத்தனை காலத்துக்குப் பின் இக்கேள்வி காசி போன்ற உத்தரபிரதேச மாநில நகரங்களில் வகுப்பு வாதத்துக்கு இருப்பிடமென்ருல் தெற்கில் உள்ள இராமேஸ்வரம் பாரதத்திலேயேமிகசிறந்த ஆலயம்வடஇந்தியர்கள் இராமேஸ்வர யாத்திரைக்கு வருடாவருடம் படையெடுக்கின்றனர்.

## இன்றையபிணக்கு

வடக்கில் என்றும் குறுகிய மதக்குரோதம், வகுப்புவாதம் மனிதனில் விலங்குதன்மைக்கு இடமளிக்கத் தயாராயிருக்கிறது 'ஸ்ரீ ராமனுக்குஜே' என்ற சோஷத்துடன் அயோத்தி மக்கள் திறக்கப்பட்ட கோவிலுக்குள் குதூகலிக்கக் முஸ்லிம் மக்கள் எதிர் ஆர்பாட்டம் நடத்துகின்றனர்-மதசார் பற்றகொள்கையில் பலம் கொண்ட மத்திய ஆட்சி இவ்வித குழப்பங்களை மடக்கிப் பிடிப்பதில் ஆற்றல்பெற்றிருக்கிறது. பஞ்சாப்பில் சீக்கியர்களுக்கும் இந்துக்களுக்கும்உண்டான கலவரத்தை மட்டுப்படுத்தி வருகிறது.

## தெற்கில்

இராமேஸ்வரம் இன்று வால்பிடி அரசியல் காரணமாக மீன் பிடிப்பிரச்னைக்கு இடமளிக்கிறது. இலங்கை கடற்படையின் தாக்குதலால் இராமேஸ்வரத்தில் இந்திய மீனவருக்கு பேரச்சம் தொடர்கிறது. அதற்கு இந்தியா-இலங்கை வால்பிடி அரசியல் காரணம். இந்திய உள்துறை பாதுகாப்பு அமைச்சர் ,இந்தியாவில் குறிப்டாகத் தெற்கில் அகதிகளாக வந்திருக்கும் $1\frac{1}{2}$லட்சம் மக்கள் இலங்கைக்கு மதிப்புடன் திரும்பும் வகையில் அவர்களின் வாழ்வு புனரமைக்கப்பட வேண்டுமென்கின்ருர்.

இந்தியா இலங்கை மீது படையெடுக்காதென்பது தெளிவு; இருப்பினும் தென்னகத்தில் வந்திருக்கும் இலங்கைத்தமிழ் [illegible] தலைவர்கள் போராளிகள் தலைவர்கள் தமிழ்நாட்டை மத்திய ஆட்சிக் கெதிராக தூண்டிவிடமுடியும் என்று இலங்கைத் தீவின் பத்திரிகை 'ஐலன்ட்' எச்சரிக்கை செய்கின்றது.

## சுந்தர்ஜி

அதே பத்திரிகையில் இன்று இந்திய ராணுவத் தலைவராக பதவியேற்ற ஜெனரல் கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜி (தமிழ் நாட்டின் செங்கற்பட்டையில் பிறந்த தமிழ்ப்பெருமகன் ஒரு 'கதைகாரர் என்று' பத்திரிகை எழுத்தாளர் நாயர் வர்ணிக்கிருர்

பிரிஷ்டிஷ் ஆட்சியிலேயே இந்தியராணுவத்தில் பிரபலம் படைத்தது. 'மதராஸ் பேரணி' Madras Regiment என்பது நாயருக்குத் தெரியாதிருக்கலாம்.

அதுமட்டுமல்ல தென்குமரி முதல் வட இமயம் வரை ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதனைப் பற்றி இன்று எத்தனை பேருக்குத் தெரியும்? பழங்கதை போகட்டும் இன்று சுதந்திர இந்தியாவின் ராணுவத்தலைவர் ஒரு தமிழர் என்பது எங்கெல்லாம் வாழும் தமிழர்களுக்குப் பெருமையென்ருலும், அது இந்தியாவின் போர்க் கொள்கைக்கு எவ்வித மாற்றமும் ஏற்படுத்தாது.

## இலங்கை

இலங்கை அரசின் அளவையியல் எந்த நாட்டிக்கும் எடுத்துக் காட்டாகாது. பிரதம நீதியரசர், சட்டமா அதிபர் இலங்கைத் தமிழர் என்ருல் நாட்டின் நீதித்துறை பற்றி இலங்கைத் தமிழருக்கு எவ்வித அச்சமும் இருக்க வேண்டியதில்லை என்று அடிக்கடி கூறிவரும் இலங்கை அரசின் நியாயம், சுந்தர்ஜீ தமிழரானதால் நாம் தலைநிமிர்ந்து நிற்க முடியுமென்பதை நிரூபிக்சாது.

ஆனுல் இந்தியப் போர்முறை தேசமனைத்துக்கும் பொதுவான அறத்தில் நிறுவப்பட்டுள்ளது. இன்றைய ஜெனரல் சுந்தர்ஜீ அதனைத் தெளிவு படுத்தியருப்பது எங்கள் சிறு நாட்டின் கண்களைத் திறக்க உதவும்.

## பண்டைய போர் இலட்சியம்

போர் முறை மிக நவீனமாஞலும் உலகிலேயே நான்காவது இடம் வகிக்கும் இந்திய ராணுவம் பண்டைய இலக்கியமாகிய ராமாயணத்திலும், மகாபாரதத்திலும் வர்ணிக்கப்பட்ட இலட்சியத்தில் அமைந்திருக்கிறது. பாகிஸ்தான் போர்களும், பங்களாதேஷ் போரும் இதனை நிரூபிக்கின்றன. போர் தொடுக்க முன்னிற்பதில்லை. நாட்டை எதிரியிலிருந்து பாதுகாக்க என்றும் தயார். அத்துடன் மிக முகக்கியமானது, நிராயுத பாணியை போரில் தோற்ற பின் இம்சைப் படுத்தாது இருக்க வேண்டு மென்ற பெரு நெறி வற்புறுத்தப் பட்டிருக்கிறது. "அன்று போர் புரிசேனையின் பதியான வீரனை நீ இன்று போய் இனி நாளை வா என இனிதியம்பினன்" என்றுகம்பர் வர்ணித்த இராமனது ஆண்மை வில்லி பாரதத்தில் விசயனது பெருமையாகப் பேசப்படுகிறது.

எனவே இந்தியாவின் இராணுவ உதவி இன்று திண்டாடும் இலங்கையின் முப்படைக்கு உதவலாம் இலங்கைத் தமிழர் அதற்கு மாருக அதனை வரவழைக்கப் போவதில்லை; அது வரவும் மாட்டாது.

இந்திய அரசுக்கு' இலங்கை 'ஐலன்ட்' உதவும் மந்திர ஆலோசனை அவசியமற்றது. 'நாய்கள் குரைக்கட்டும்' இந்தியப் பிரதமர் தமக்கு நாடளாவிய தொல்லைகள் மத்தியிலும், இலங்கை கு ஒரு அரசியல் தீர்வைக் காணும் நம்பிக்கை கொண்டிருப்பது வியக்கத்தக்கது.

## உபகண்டத் தொல்லைகள்

பிலிப்பைன்ஸ் போல ராணுவஆட்சி நடத்தி அதனைச் சிவில் ஆட்சியாக மாற்றும் முயற்சியில் திண்டாடும் பாகிஸ்தான், பங்களாதேஷ் போலல்லாமல் இந்திய ஜனநாயக ஆட்சி எதிர்க்கட்சிகளைக் கனம் பண்ணித் தன் தொல்லையைத் தீர்க்க முயல்கிறது.

## பஞ்சாப்

இந்தியப்பிரதமருக்கு பஞ்சாப்பில், அசாமில், ஜம்முகாஷ்மீரில் இன்னும் பல மாநிலங்களில் தொல்லைகள் புழுத்து வழிகின்றன ஒவ்வொன்றையும் பரபரப்பின்றி உள்ள முறையில் மாநில அரசுடனும், எதிர்க்கட்சிகளுடனும் சாவதானமாக அணுகிவருகின்ருர்.

பஞ்சாப் பொற் கோவில்; பயங்கரவாதிகளுக்கு மீண்டும் உறைவிடமாக உள்ளது. அதனைத்தீர்க்க முதலமைச்சர் பர்னுலாவுக்கு உரிய அதிகாரத்தையும் அரசியல் தந்திரத்தையும் உதவுகின்ருர் ஹரியாணு பிரச்னை, பஞ்சாப் உடன்பாட்டை அழித்துவிடாது. தாமதம் ஏற்பட்டாலும் சண்டிகார் பஞ்சாப்பிற்கே போகும். தக்கமுறையில் ஹரியாணுவுக்கு ஹிந்தி பேசும் மாநிலப்பகுதிகள் கொடுக்கப்படும்.

## அசாம் உடன்படிக்கை

கடந்தகால இந்திய ஆட்சியின் அநீதிக்கு அசாம் பிரச்னை ஒரு நல்ல உதாரணம், அதனை நீக்கியதே அசாம் உடன்படிக்கை. இன்று இந்தியாவின் மிக இளைய முதலமைச்சரான மஹான்தா பெரும்பான்மை தொகை பிரமச்சாரிகள் கொண்ட அமைச்சர்களின் தலைவராக, இந்திய அரசு எதிர்பாராத வகையில் ஆட்சி அலுவல்களில் ஈடுபடுகின்ருர். கிளர்ச்சி செய்யும் ஆற்றல்வேறு! நாட்டைப்பரிபாலிக்கும் ஆற்றல்வேறு! ஆனுல் இந்த அற்புத இளைஞர் தம்முடைய தியாகக்கூட்டாளிகளுடனும், மத்திய ஆட்சியின் ஒத்துழைப்புடனும் மடங்கிக்கிடந்த அசாமை முன்னேற்ற வல்லவர் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

## ஆந்திரா

தெலுங்கு தேசத்தலைவர் ராமராவ், எதிர்க்கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி, ஒரு பாரத

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றும் உலக....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தேச எதிர்க்கட்சியை உருவாக்க முயல்கின்றூர். கவர்ச்சிகரமான பேர்வழி என்றுலும், தமது சொந்த மாநிலத்தில் தொல்லைகளுண்டு. அவற்றை ஒழிக்க அங்கு கவனம் தேவைப்படுகிறது. டில்லித் தலைவர்கள் என்றும் அகில இந்திய தலைவர்களாக இருக்கும் மரபு உடைத்தெறிய வேண்டிய தால் மாநிலங்களில் தேசியத் தலைமைக்கு உகந்த ஆற்றல் அனுபமும் படைத்தவரை தேசஅரங்கில் அறிமுகப்படுத்த வேண்டும். கர்நாடகமும் கேரளமும் தங்கள் நெருக்கடிகளை தாமே தீர்க்க வேண்மென்று மத்திய ஆட்சி உறுதி பூண்டிருக்கிறது.

## இந்திய உப கண்டம்

பாகிஸ்தானின் அணுகுண்டு ஆறின கஞ்சியாயிருந்தாலும் இந்தியாவின் சதா விழிப்புணர்வுக்குரிய விடயம் அது. பங்களாதேசிலும் சிவில் ஆட்சி தடைப்பட்டிருப்பதும், பிலிப்பைன்சில் 20 வருடத்துக்குபின் நடந்த ஜனதிபதி ஆட்சி இன்று உலகுக்கு உணர்த்தும் மூன்றும் உலக 'ஜனநாயக மரபும்' இந்தியாவின் மக்கள் ஆட்சி மகத்தான நிலையில் நிறுவப்பட்டுள்ளதை எதிர்மறை நோக்கில் படம் பிடிக்கின்றன. இன்றைய இலங்கை ஆட்சி மோசமடையாது பாதுகாக்க வல்ல சக்தி இந்தியாவுக்கு அதிகம் உண்டு.

## கடைசிநேர வரிவிளம்பரம்


### காணவில்லை

10 மாத வயதுடைய சிவப்பு நிற ஜேசி பசுக்கன்று ஒன்று 19ம் திகதியிலிருந்து கைலாய பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள எமது வீட்டில் இருந்து காணுமல்போய் விட்டது. தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் 599, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C934]

வல்வெட்டித்துறை அம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த திரு. சின்னராசா சிவபாலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையை இணுவில் காங்கேசன்துறை வீதியில் தவறவிட்டுவிட்டேன். கண்டு எடுத்தவர்கள் எஸ். மூர்த்தி, 82/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் விலாசத்தில் ஒப்படைத்து சன்மானம் பெற்றுக்கொள்ளலாம். (A936)

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30, 9-15
எம். ஜி. ஆர். - லதா
**ஊமைக் குரல்**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-45 6-30
தேங்காய், மூர்த்தி
தங்கவேலு, சோ, மனோரமா
நடித்த
**உங்கள் வீட்டு கல்யாணம்**

**வெலிங்டன்**
10-30, 2-30 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ்
நடித்த
**ஆனந்த ராகம்**
(புதிய பிரதி கலர்)


## சுவிஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லத் முதலி, வவனியா பிரஜைகள் குழுத்த தலைவர் திரு. எக்ஸ். என். சொர்ணபால, திரு. கொட்பிறே குணதிலக ஆகியோரையும், தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடி விபரங்கள் கேட்டறியவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

**செல்வி தயானி கதிரவேலு (சசி)**
(யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி மாணவி)



மலர்வு: 02-02-1973
உதிர்வு: 01-03-1985
திதி: 24-02-1986

அன்பினாலும் செல்லக் கதையினாலும் அனைவரையும் ஆட்கொண்ட என் செல்வமே நீ உண்ட உணவு செமிக்க முன்னர் உன் உடல் கிணற்றில் மிதந்ததே-அம்மா சசி என்னும் பெயரைக் கொண்ட சரஸ்வதி நீயம்மா. நீ சென்று ஓராண்டு காலமானாலும் நாம் உன்னை மறப்பதில்லை. நீ வணங்கிய தெய்வமே உன்னைக் காக்கவில்லை. உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கிறோம்.

இங்ஙனம்,
உன்னையிழந்து வாடும்:

**உன் அருமை அம்மா, ஐயா, அக்கா (பாமினி), அண்ணார்மார்கள் கிருபாகரன், சிவகரன், மனோகரன் மற்றும் சகோதரர்கள், மாமா, மாமி, பெரியம்மா, சித்திமார், சித்தப்பாமார்கள், ஆச்சி, அப்பா**

**ச. கதிரவேலு.**
செனடிலன்
திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம். C 933


## சி. ஐ. ஏ உளவாளி சிறையில் தற்கொலை!

[வாஷிங்டன்]

சீனாவுக்கு முக்கியஇரகசியங்களைக் கையளித்த குற்றத்துக்காக கைது செய்து காவலில் வைக்கப்பட்ட முன்னாள் சி. ஐ. ஏ. உளவாளி லாரிவூ தாய் சின் சிறையில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்!

சீனாவுக்கு உளவுபார்த்தமைக்காக குற்றஞ்சாட்டப்பட்ட முதல் அமெரிக்கர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

## இனப்பிரச்னை..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திருமதி ஜே. ஆர். வில்சன் தலைமையில் நடைபெற்றஒக்ஸ்போர்ட் மாணவர் சங்கக் கருத்தரங்கு மண்டபம் இங்கிலாந்திலுள்ள தமிழ், சிங்கள பார்வையாளர்களால் நிறைந்திருந்தது.

திரு. சிவசிதம்பரம் தமது உரையின் முடிவில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில்; ''இந்தியா இரண்டுபட்டு பாகிஸ்தான் என்றொரு நாடு உருவாகிய பின்னரும் இந்தியாவில் கணிசமான அளவு முஸ்லிம்கள் வாழுகின்றனர். உலகில் அதிகமாக முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் வாழுகிறூர்கள் என்ற ஒரே காரணத்துக்காகத் தமிழர்கள் தமக்கென ஒரு தனிநாடு கோருவது நியாயமில்லை எனக் கூறுவதில் எதுவித அர்த்தமுமில்லை'' எனக் குறிப்பிட்டார்.

1985 ஜூன் மாதத்திற்குப் பின்னர் 2000 தமிழர்கள் கொல்லப்பட்டதையும் 7000 வீடுகள் எரிக்கப்பட்டதையும், 400 தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டதையும் ஆதாரப்படுத்தக்கூடிய தஸ்தாவேஜுகள் தம்வசமுள்ளதாகவும் திரு. சிவசிதம்பரம் கூறினூர்.

'பௌத்த சிங்கள தேசிய வாதம்' என்ற தலைப்பில் மேற்படி கருத்தரங்கில் உரையாற்றிய திரு டக்ளஸ் விக்கிரமரத்ன, தென்னுபிரிக்க இனத்தவர்களைத் தவிர உலகில் இலங்கையில்தான் தமிழர்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதே தலைப்பில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி உரையாற்ற அழைக்கப்பட்டதும், அவர் அந்த அழைப்பை நிராகரித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.


## உருக்கமான வேண்டுகோள்

கடந்த வருடம் ஆவணி மாதம் 9-ம் திகதி காலை 8-30 மணியளவில் யாழ்ப்பணத்திலிருந்து கல்கமுவா செல்லும் வழியில் 28 ஸ்ரீ 6675 E. L. F. இலக்கமுடைய நீலநிற இசுசூ வானுடன் 40 பக்கற் சீமெந்து கண்டிவீதியில் மாங்குளத்தல்வைத்து இனந்தெரியாத நபர்களினல் கடத்தப்பட்டது. இதில் புனித இயக்கங்க தலையிட்டு மீட்டுத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படிக்கு.
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

[C 932]


## முதலாவது டெஸ்ட் போட்டி
# இலங்கை : 109 பாகிஸ்தான்: 58-4

[கண்டி]

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்கும், இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கு மிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று கண்டி அஸ்கிரிய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைக் கோஷ்டி தேனீர் இடைவேளைக்கு முன்பாக சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 109 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அசந்தடிமெல் 23 ஓட்டங்களைப் பெற்றூர். பாகிஸ்தான் கோஷ்டியின் காப்டன் இம்ருன்கான் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், அப்துல்காதர் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினூர்கள்.

பாகிஸ்தான் கோஷ்டி நேற்றைய ஆட்டம் நிறுத்தப்படும்போது 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 58 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆரம்ப துடுப்படி வீரரான முடஷர்நஸார் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களைப் பெற்றூர்.

பாகிஸ்தானின் நான்கு விக்கெட்டுகளையும் 'எல் பி டபிள்யூ' முறையிலேயே இலங்கை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

2-ம் நாள் ஆட்டம் இன்று காலை 10-30 மணிக்கு ஆரம்பமாகும். [வி]

## முல்லைத்தீவில் மின்கம்பதண்டனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வாடி வீட்டுக்கருகில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்தநிலையில் ஒருவர் மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்குப்பக்கத்தில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியில்; 'கிருஷ்ணமூர்த்தி (27 வயது) என்பவர் 'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களை இராணுவத்தினருக்குக் காட்டிக்கொடுத்தவர் என்றும், சிலாவத்தைக் கிராமத்தில் இவர் கொடுத்த தகவலின்பேரில் இராணும் ஒரு வீட்டைச் சுற்றிவளைத்ததென்றும் முகமூடி அணிந்து முல்லைத்தீவு கிளிநொச்சி ஆகிய இடங்களில் போராளிகளைக் காட்டிக் கொடுத்து பணம் பெற்றுக் கொண்டவர் என்றும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. இச்குற்றச்சாட்டின் பேரில் இவருக்கு 'தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மரணதண்டனை வழங்கியது'' என்று காணப்பட்டது. (மா)

## முரசுமோட்டை.--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றப்பட்டனர். அவர்களது சைக்கிள்கள் பலவும் கைப்பற்றப்பட்டன.

கைதானேரின் தொகை இருபத்தைந்திற்கும் அதிகம் என்றும் இரவோடிரவாக சென்ற 'கறுப்புச்சட்டை' க்காரர் அகாலையில் கைதுசெய்ததாகவும் கூறப்படுகிறது.

## 'ட்ரக்' உரிமை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டுமாவடியைச் சேர்ந்த ''ணுப் சேகு இஸ்மயில் அப்துல் ஸலாம் என்பவரே பலியானவராவார்.

மட்டக்களப்பிலிருந்து நெற்று முன்தினம் மாலை சன்னுமுனை ஊடாகச் செல்லும்பொழுது இச்சம்பவம் இடம்பெற்றது இவர் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நேற்று அதிகாலை மரணமானூர். (மா)

## இணைப்பதிகாரி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வவை சந்திக்கும் இதேவேளை நாளை மறுதினம் இராணுவ முகாமை அப்புறப்படுத்தக் கோரியும், புகையிரத நிலைய துப்பாக்கிச்சூட்டு மரணங்களுக்கு கண்டனத்தை தெரிவிகுமுகமாகவும், இராணுவத்தை முகாமில் வைத்திருக்கக் கோரியும் பொதுக்கூட்டமொன்றை கிளிநொச்சிப் பிரஜைகள் குழு கூட்டியுள்ளது.

இக் கூட்டத்தில் பல்வேறு பொது அமைப்புக்களும் சமந்து கொள்ளும். கரடிப்போக்கு விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் இக்கூட்டம்நடைபெறும்.

## 120-வது வயதில் காலமானூர்!

(டோக்கியோ)

உலகில் மிகமிக முதியவர் எனக் கருதப்படும் ஜப்பானியப் பிரஜையான ஷிஜேசியோ இஸுமி தமது 120.வது வயதில் நேற்று முன தினம் காலமானூர்.

நீண்டகால வாழ்வுக்கு ... ஸ்' உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற இஸுமி எதிர்வரும் ஜூன் மாதத்தில் 121-வது வயதை எய்தவிருந்தார்.

## விஞ்ஞானப்பட்டதாரி நியமனக் கடிதங்கள்

(கொழும்பு)

விஞ்ஞானப்பட்டதாரி, விவசாய டிப்புளாமா ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நியமனக்கடிதம் கிடைத்தவர்கள் அந்தந்த மாவட்டங்களுக்கும் சென்று கல்விப் பணிப்பாளரிடம் கடமைபுரிய வேண்டிய பாடசாலைகளின் விபரங்களைப் பெறலாம்.

ஒரு வாரகாலத்துக்குள் கடிதம் கிடைக்காதவர்கள் கல்விச்சேவைகள் ஆணைக்குழுவுடன் தொடர்புகொண்டு தங்கள் நியமனக்கடிதங்களைப் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-பி)

## வேலணை ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர்

[வேலணை]

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் புதிய பொது முகாமையாளராக, யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தின் பிரதம கணக்காளர் திரு. இரா. யோகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வேலணை ப. நோ. கூ. சங்கத்தில் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய செல்வி இ. சோமசுந்தரம் கட்டாய விடுமுறையில் செல்லுமாறு கூட்டுறவு உதவி ஆணையாளரால் பணிக்கப்பட்டதன் காரணமாகவே திரு. யோகநாதன் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானக் குண்டுத் தாக்குதலின் போது ...


# ● கட்டிடத்தின் கீழ் நின்றால் என்ன செய்ய வேண்டும்?

## ● வெட்டப்படும் அகழி எப்படி இருக்க வேண்டும்?

**விமானக் குண்டுத் தாக்குதல்களிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றிய கட்டுரையின் 2ம் பகுதி நேற்று வெளியிடப்பட்டிருந்தது. மூன்றும் பகுதி இன்று வெளிவருகிறது.**

உறுதியான வீடுகளோ அல்லது அருகில் வேறு கட்டிடங்களோ கிடையாவிடின் உங்களது சூழலில் உள்ள அமைப்புகள் சிலவற்றை குண்டு வெடிப்பின்போது ஏற்படும் சிதறு துண்டுகளுக்கெதிரான பாதுகாப்புள்ளதாக எவ்வகையில் மாற்றலாம் எனக் கவனிப்போம்.

அவைகள் நேரடியாகவோ அல்லது ஒரு சில அடிகள் அண்மையிலோ விழுந்து வெடிக்கும் குண்டுகளுக்கு மட்டுமே பாதுகாப்பற்றனவாகும். அவ்வகையான சந்தர்ப்பங்கள் மிக மிகக் குறைவானதாகும். மின்னலின்போது ஏற்படும் இடியானது ஒவ்வொன்றும், எமது தலைகளின் மீதே விழுந்து விடும் என்று எண்ணுவது எவ்வளவு முட்டாள்தனமானதோ அதைப்போன்றதே போடப்படும் குண்டுகளும் நேரடியாக எம்மீது விழுந்து வெடிக்கும் என எண்ணுதலுமாகும். எனவே குண்டு வீச்சுக்களிற்கு எதிரான வகையில் பிரத்தியேகமான அகழிகள் அமைப்பதற்கு இயலாதவர்கள் இயலுமானவரை மேற்கூறியவாறோ அல்லது வேறுவகையிலோ ஏதாவதொரு பள்ளமோ, கிடங்கோ உங்கள் அருகில் காணப்படுமாயின்



பாதுகாப்புக்காக வெட்டப்பட்டிருக்கும் அகழியின் தோற்றம்

இதன் போது மரவாலைகள் முதலியவற்றில் மரம் அரிவதற்காக வெட்டப்பட்டிருக்கும் கிடங்குகள் பயன்படுத்தக் கூடியனவாகும். நீங்கள் பயன்படுத்துவதற்குத் தேவையான பகுதியை விடுத்து ஏனைய பகுதியை சில பலகைகளினாலோ, மண் சாக்குகளினாலோ, தகரங்களினாலோ மூடி குண்டு வீச்சு நிகழும் போது அதனுள் சென்றிருப்பது பாதுகாப்பானதாகும். உங்கள் சூழலில் உள்ள ஒரு சில கோயிற் கேணிகள் பாவிக்கப்படாத நிலையில் செடி, கொடிகள் வளர்ந்து கவனிப்பாரற்று இருக்குமாயின் அவற்றினைக்கூட நீங்கள் மேல் பகுதியை மூடிவிட்டு பயன்படுத்தலாம். அவ்வகையான கேணிகள் அகலம் கூடியவையாய் இருப்பின் இது சிறிது கடினமான செயலாகவே இருக்கும். பாதை ஓரங்களில் நீர் வடிந்து செல்வதற்காக வெட்டப்பட்டிருக்கும் வடிகால்கள் போன்றவற்றைக்கூட சற்று ஆழமாக்கி குண்டு வீச்சுக்களிற்கு எதிரான அகழிகளாக மாற்றலாம். இவற்றைப்போல் தூர்ந்த கிணறுகள், மதகுகளின் கீழ்ப் பகுதிகள், பெரிய கான்கள் போன்றவைகூட உங்களை குண்டு வீச்சுத் தாக்குதல்களில் இருந்து பெருமளவு பாதுகாக்கும் சில வேளைகளில் மேற்பகுதி மூடக்கூடிய வசதி இல்லாவிடில் அவ்வாறான இடங்களை பாதுகாப்பற்றது எனக்கருதி ஒதுக்கி விடவேண்டாம்.

அவற்றினை குண்டுவீச்சிற்கெதிரான காப்பாகப் பயன்படுத்துவது சிறப்பானதாகும்.

இனி நாம் குண்டுவீச்சிற்கெதிராக விசேடமாக அமைக்கப்படும் அமைப்புக்களைக் கவனிப்போம். ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் நேரடியாகக் குண்டு மேலே விழுவதற்குப் பாதுகாப்பான அமைப்புகளைக் கட்டுவது என்பது பொருளாதார ரீதியில் ஒவ்வொருவருக்கும் சாத்தியமானதல்ல. இருப்பினும் நேரடியான தாக்குதலுக்கெதிரான ஒரு சில அமைப்புகள் கீழே தரப் பட்டுள்ளன.


பொதுவாக இம்மாதிரியான அமைப்புகள் நிலத்தின் கீழ், அகழிகள் வடிவிலேயே அமைக்கப்படுகின்றன- ஏனெனில் நிலத்தின் மேல் அமைக்கப்படும் அமைப்புகளாயின் பக்கவாடுகளும் கூட குண்டு வீச்சுத் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்கு முகமாகவே கட்டப்பட வேண்டும். இது மேலும் அதிகளவு பொருட் செலவை தரும் என்பதால் நிலங் கீழ் அமைப்புகளே விரும்பப் படுகின்றன. இதன் போது பக்கவாடுகள் அனைத்தும் மண்ணினால் பாதுகாப்பாக சூழப்பட்டிருப்பதால் மேல் பகுதிக்கு மட்டும் தாக்குதலை எதிர்கொள்ளக் கூடிய வகையில் கூரை அமைக்கப் படுதலே போதுமானதாகும். உதாரணமாக 550 இறாத்தல் எடையுடைய உயர் வெடி மருந்தைக் கொண்ட வெடி குண்டொன்றின் நேரடியான தாக்குதலை எதிர்கொள்ளவேண்டுமாயின் கூரையானது 9 1/2 அடி உயரமுடைய வலுவாக்கப்பட்ட கொங்கிறீற்றினால் (Reinforced Concrete) ஆக்கப் பட்டிருக்க வேண்டும். அல்லது 3 அடி வலுவாக்கப்பட்ட கொங்கிறீற்றும், 15 அடி உயரத்திற்கு மண்ணும் இருப்பின் கூட அதே வகையான பாதுகாப்புக் கிடைக்கக் கூடியதாயிருக்கும்.

மேற் கூறப்பட்ட விசேஷ அமைப்புகளை விட மக்கள் அனைவராலும் அமைக்கக்கூடிய அகழிகள் இருவகைப் படுகின்றன. திறந்த அகழிகள், மூடிய அகழிகள் என்பவையே அவையாகும். இங்கு ஒப்பீட்டு ரீதியில் பார்க்குமிடத்து மூடிய அகழிகளானவை திறந்த அகழிகளை விட அதிகளவு பாதுகாப்பைத் தரக் கூடியனவாகும். ஆனாலும் திறந்த அகழிகளில் உள்ள நன்மை யாதெனின், குறுகிய அவகாசத்தினுள் அதிகமானோர் அதனுள் உடனடியாக மறைந்து கொள்ளக்கூடியதாக இருப்பதேயாகும்.

### திறந்த அகழிகள்


இவ்வகை அகழிகள் பொதுவாக பலர் கூடுமிடங்களுக்கு அருகிலேயே வெட்டப்பட வேண்டும் உதாரணமாக பாடசாலைகள், சந்தைகள், தியேட்டர்கள் போன்றவற்றினுள்ளே அல்லது அருகிலோ இவை அமைக்கப்பட வேண்டும். இவை தவிர பிரதான சாலைகளில் கூடியளவு சனப் புழக்கம் உடைய சந்திகள் போன்ற இடங்களிலும் கூட இவற்றை வெட்டி வைக்கலாம் இப்பொதுள்ள சூழ்நிலைகளில் படைகள் ரோந்துவரக் கூடிய பிரதான வீதிகளில் இவற்றை அமைத்தல் விரும்பத் தக்கதல்ல. நீங்கள் அமைக்கும் இடங்களிலும் தவிர்க்க முடியாத சந்தர்ப்ப மொன்றின் போது படையினரின் கண்களில் பட்டு விடுமாயின் வேறு ஏதாவது கட்டுக் கதையொன்றை அவர்களை நம்ப வைக்குமாறு கூறுவதற்குத் தயாராக இருப்பின் மிகவும் சிறந்ததாகும். ஆனல் தமிழீழப் போராட்டத்தின் உச்ச கால கட்டங்களில் படையினர் முகாங்களை விட்டு நேருக்கு நேர் வந்து சண்டையிடுவதைவிட பெருமளவு ஆகாயா விமானத் தாக்குதல்களிலேயே ஈடு படுவார்கள். அக்கால கட்டங்களில் இவ்வகை அகழிகள் பெருமளவில் அமைக்கப்படுதல் வேண்டும்.

ஒற்றை அகழி ஒன்றானது 8 அடி நீளமும், இரண்டரைஅடி அகலமும், 3 தொடக்கம் 4 அடி வரை ஆழமும் கொண்டதாகஇருக்கவேண்டும் இங்கு ஒரு நபருக்கு 4 சதுரஅடி நிலப் பரப்பு தேவை என்பதால் மேற்கூறப்பட்ட அகழியினுள் ஐவர் மாத்திரமே பதுங்கக் கூடியதாக இருக்கும். மேலும் அதிகமானவர்களுக்காக திறந்த அகழிகளை வெட்டும் போது ஒற்றை அகழி ஒன்றினை


கட்டிடத்தின் ‘பிளாட்’ ஓரத்தின்கீழ்...

அப்படியே நீளத்தை அதிகரித்து பாவித்தல் புத்திசாலித் தனமல்ல. பதிலாக, முன்னர் அமைத்தஅகழியுடன் தொடர்பானதாக, ஆனல் அதனுடன் 80 பாகைக்கும், 100 பாகைக்கும் இடைப்பட்ட கோணமொன்றை [அண்ணளவாக செங்குத்தாக] அமைக்கக்கூடியவாறு வேறொரு ஒற்றை அகழி ஒன்று 8 அடி நீளத்துக்கு வெட்டப்படலாம். இவ்வாறே மேலும் அதிகமானவர்களுக்காக அலை வடிவத்தில் தொடர்ச்சியாக அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் போதும் முழு நீளம் 30 அடிக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். அவ்விடத்தில் மேலும் அகழி அமைக்கவேண்டிய தேவை ஏற்படுமாயின், முன்னர் அமைக்கப்பட்ட அலை வடிவ அகழி அமைப்பிலிருந்து 45அடிக்குக் குறையாத தொலைவிலேயே அடுத்த அகழி வரிசை அமைக்கப்படவேண்டும். இவ்வகை திறந்த அகழிகளானவை கட்டிடங்கள் யாவற்றுக்காவது அருகில் அமைக்கவேண்டி இருப்பின், கட்டிடத்தின் உயரத்தின் அரைப்பங்கு தூரத்திலும் கூடியளவு தொலைவிலேயே அமைக்கப்படவேண்டும், குண்டு வீச்சின்போது அக் கட்டிடம் இடிந்தால் அதன் உடை பகுதிகள் அகழியினைச் சிதைவுறுது தடுப்பதற்காகவே மேற்கூறியவாறு அமைக்கப்படவேண்டியுள்ளது

பொதுவிடமொன்றில் இவ்வகையான அகழிகள் அமைக்கப்பட்டிருப்பின், அவ்விடத்திற்கு வந்து போகின்ற அனைவருக்கும் அது அமைந்திருக்கும் இடமும் அதனை அடையும் பாதையும் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு சமிக்ஞை ஒலி கேட்டவுடனேயே அவ்விடத்திலுள்ளவர்கள் உடனடியாக ஓடிச்சென்று அகழிகளினுள் குதித்து, பதுங்குதலை இடையிடையே பயிற்சியாகச் செய்து வைத்திருத்தல் சிறந்ததாகும். முக்கியமாக பாடசாலைகளில் இவை அவசியம் பயிற்றப்படுதல் வேண்டும் இதற்காக நீங்கள் உங்களுக்குள்ளேயே சிறு அமைப்பொன்றை ஏற்படுத்தி ஒழுங்கான முறையில் செயற்படுதல் சிறந்ததாகும் அகழிகளினுள் ஓடிச் சென்று


பூட்டிய கட்டிடமொன்றின் அருகில் உள்ளபோது...

குதிக்கும்போதும் அனைவரும் ஒருசேர ஓரிடத்தை நோக்கி ஓடிச்சென்று குதிக்காமல் பரந்து சென்று இயலுமான மானவரை ஐதாக முழு அகழிகளினுள்ளும் மறைப்புத் தேடுதல் கூடியளவு பாதுகாப்பைத் தருவதோடு விரைவாக செயற்படக்கூடியதாயும் இருக்கும்.

இவ்வகை அகழிகள் ஒவ்வொரு குடும்பத்தினராலும் அமைக்கப்படவேண்டியனவாகும். இவை செலவு குறைந்த, நாளாந்தம் பாவனையிலுள்ள, இலகுவில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டே அமைக்கக்கூடியவை. இவை திறந்த அகழிகளைவிட சற்று ஆழமான, பாதுகாப்பான அகழிகளாகும், பொதுவாக 10 அடி நீளமுள்ளதாகவும், 6 அடி ஆழமுள்ளதாகவும் இவற்றினை அமைக்கலாம். இவற்றின் மேற்புறம் நாலரை அடி அகலமானதாகவும், அடிப்புறம் சற்றே குறுகியதாக மூன்றரை அடி அகலமானதாக இருப்பின் சுவர்கள் இடிவுற்று விழுவது தடுக்கப்படுகிறது. உட்சுவர்களை மேலும் பலமானதாக்கி, சரிவுற்று விழுவதைத் தடைசெய்வதற்காக பலகைகள் கம்புகள் என்பன உட்சுவர்களுடன் இறுக்கமாகப் பொருத்தப்படலாம். தேவையாயின் இருக்கை வசதிகள்கூட செய்யப்படலாம்.

இவ்வகையான அகழியொன்றினை அமைப்பதற்காக இடமானது தெரிவு செய்யப்படும் போது சந்தேகம் ஏற்படாவகையில் உங்களால் இலகுவில் செல்லக்கூடிய இடமாயும் தெரிவு செய்யப்படல்வேண்டும் உதாரணமாககோழி, ஆடுமாடு போன்ற வீட்டுவளர்ப்புப் பிராணிகளின் கொட்டில்களின் கீழே அகழிகளை அமைத்து மேலே பிராணிகளைவளர்க்கலாம். வைக்கோல் போர்களின் கீழோ, குப்பை மேடுகளின் கீழோ நீர்த்தொட்டிகளின் கீழோ விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடத்தின்கீழோ கூட இவற்றினை அமைக்கமுடியும் வீட்டினது வெளி பதிற் சுவரினது உட்புறம் பூ மரங்களின் இடையே அமைத்தலோ மலசல கூடங்களின் அருகில் அமைத்தலோ கூட தப்பக்கூடியதாய் இருக்கும் இயலுமாயின் உங்களது வீட்டுக் கிணறுகளினூடு இறங்கி ஒரு பக்கத்தைக் குடைந்து உட்செல்லக்கூடியவாறு அமைத்தல் சிரமமாயிருப்பினும் அதுவும் சிறந்த ஒரு வழியாகும். சில வேளைகளில் உங்களது வீட்டிற்கு மிக அருகில் ஏற்கனவே குண்டுபோடப்பட்டு இடிவுற்ற நிலையிலோ அல்லது பாழடைந்த கவனிப்பாரற்ற நிலையிலோ கட்டிடங்கள் யாதாயினும் காணப்படின், அவ்விடிபாடுகளை அகற்றாது அதன் உட்புகுந்து செதியான ஓரிடத்தில் நிலத்தின் கீழ் அமைத்தலும் சந்தேகத்தை தராத ஒரு முறையாகும்.

இனி, ஒரு மூடிய அகழியொன்றை எவ்வகையில் அமைக்க வேண்டும் எனப் பார்ப்போம். இதன்போது

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாண்டு நினைவஞ்சலி

**கனகசபை ஞானச்சந்திரன்**
**(முன்னுள் அரசாங்க அதிபர், முல்லைத்தீவு.)**



**இறைவன் அளிப்பு: 16- 07- 1930**
**மனிதன் அழிப்பு: 24- 02- 1985**

முக்கிய பொறுப்பினை வகித்ததால் பிரச்னைகளால் சூழப்பட்டு இவ்வுலக வாழ்க்கையை நீத்த எங்கள் அன்பானவரே, உங்கள் முகமும், பேச்சும் நீங்கள் சொரிந்த அன்பின் நினைவுகளும் எந்நாளும் எங்கள் இதயங்களில் மங்காமல் நிலைத்திருக்கும்.

அன்புப் பெற்றோர்,
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.
[A 269]

## உதைபந்தாட்ட பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

'யாழ். உதைபந்தாட்ட பயிற்சியாளர் சங்கம்' தரமான உதைபந்தாட்டப்பயிற்சியாளர்களை உருவாக்கும் நோக்குடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் உதைபந்தாட்டப் பயிற்சி வகுப்புக்களை நடாத்த இருக்கிறது.

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட பயிற்சியாளர் ஏ. எஸ் குணரட்ணம், மேற்படி சங்கத்தின் தலைவர் எஸ்.எம் மாட்டீன் தலைமையில் பயிற்சி வகுப்புக்களை நடாத்தவிருக்கின்றனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இப் பயிற்சி வகுப்புகளுக்கு உதைபந்தாட்டத்தில் ஆர்வமுள்ள எவரும் எதுவித நிபந்தனையுமின்றி கலந்து கொள்ளலாமென இச் சங்கத்தின் காரியதரிசி யே. அமலசீலன் தெரிவித்தார்.

(வி)

## இரத்தம்...

**(3-ம் பக்கத்தொடர்ச்சி)**

..கையில் இறந்தவரின் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும் முக்கிய இரத்த நரம்புகள் சேதமடைந்திருந்ததாகவும் இரத்தப் பெருக்கால் மரணம் சம்பவித்ததாகவும் கூறினார்,

விசாரணை முடிவில் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# "விளையாட்டு மைதானங்களில் வெற்றி-தோல்வியையும் சமனுக நினைக்க வேண்டும்"

## டாக்டர் பிலிப்

(யாழ்ப்பாணம்)

"இவ்வருடம் சமாதான வருடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால், எடுளி விளையாட்டுக் கழகங்களுக்கு டையே மேலும் ஒற்றுமையும், சகோதரத்துவமும் வலுவடைய வேண்டும் என்பதையே நான் விரும்புகின்றேன்."

இவ்வாறு யாழ் உதைபந்தாட்ட லீக்கின் புதிய தலைவராக மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது: "அண்மைக் காலங்களில் விளையாட்டு மைதானங்களில் பல குழப்பங்கள் ஏற்பட்டதை யாவரும் அறிவீர்கள். ரசிகர்கள் அத்துமீறி விளையாட்டு மைதானங்களுக்குள் பிரவேசித்து குளப்பங்களை ஏற்படுத்துவதும், மத்தியஸ்தரின் தீர்ப்பை ஏற்காது வீரர்கள் மைதானத்தை விட்டு வேளியேறுவதும் வருங்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும். வெற்றியையும், தோல்வியையும் சமனுக நினைக்கும் மனப் பக்குவம், விளையாட்டு வீரர்களிடையேயும், ரசிகர்களிடையேயும் ஏற்பட வேண்டும்" எனவும் தெரிவித்தார்

பின்வருவோர் புதிய வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்:

தலைவர்: டாக்டர் ஜே. பி ஸி. பிலிப், உப தலைவர்கள்: சற் சிங்கராயர், எஸ். எம். மாட்டீன், எஸ். வேதநாயகம், ஏ. யேசுதாசன், ஏ. செபஸ்தியாம்பிள்ளை. எஸ். சிவகுரு, காரியதரிசி: ஈ. கே, குமரையா, உப- காரியதரிசி: எம். தேவதாஸ், தனதிகாரி: எஸ். எஸ். தாசீசியஸ் கணக்குப் பரிசோதகர்: பி. சி. அன்ரணி (வர்த்த வங்கி, யாழ்ப்பாணம்). (வி)

## கட்டிடத்தின்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

பாவனைக்குத் தேவையான பகுதியாகிய 6 அடி ஆளமான கிடங்கு ஒன்று வெட்டப்பட்டாலே போதுமானதாகும். ஆனுல் இவ்வாறு வெட்டப்பட்டிருப்பினும் அதற்கு தேவையான பாதுகாப்பான கூரையானது நிலமட்டத்தின் மேலேயே அமைக்கப்பட வேண்டியதாயிருக்கும். இவ்வாறு அமைப்பது இலகுவில் படையினரின்கவனத்தை ஈர்த்துவிடும்என்பதாலேயேஇங்கு கூறப்படும் மூடியஅகழியமைப்புக்கள் அனைத்தின் கூரைகளையும் நிலத்தின் கீழேயேஅமைக்குமாறு கூறப்பட்டிருக்கிறது. இருப்பினும் உங்களால் நிலமட்டத்தின் மேல் கூரையமைப்பு அமைக்கப்பட்டு, அதனை வைக்கோலினுல் மூடி ஒரு வைக்கோற் போரைப் போலவோ, அல்லது குப்பையை குவித்து ஒரு குப்பை மேட்டைப் போலவோ,அன்றி வேறுயாதேனும் ஒரு வழியின் மூலம் அதனுள் அகழி இருப்பதை மறைக்கக் கூடியவாறு இருப்பின் அவ்வாறேயும் கூட அமைக்கலாம் அடுத்து கூரை அமைப்பினைக் கருத்தில் கொள்ளும் போது அதற்குத் தேவையான பொருட்களைப் பார்ப்போம். இலகுவில் கிடைக்கக்கூடிய பொருட்களான மரக்கட்டைகள், சிறு பாறைகள் அல்லது பெரிய உறுதியான கற்கள், மண் அல்லது மணல் சாக்குகள் போன்றவையே அவையாகும். இங்கு உதாரணத்துக்காக செய்முறைகளுடன் கரப்பட்டிருக்கும் மூடிய அகழியானது முழுதாக நிலத்தின் கீழ் அமைக்கப் பட்டதாகவும் மரக்கட்டைகள், சிறு பாறைகள், மண் போன்றவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட 5 அடி உயரமுடைய கூரையினையும் கொண்டுள்ளது. இது ஒரு உதாரணமேயாகும். உங்களது அமைப்புக்களும் இதே போல் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மேலும் பாதுகாப்புள்ளதாக மாற்ற வேண்டுமெனின் கூரையின் உயரத்தினை நீங்கள் அதிகரிக்கலாம் ஆழமான கிடங்கு வெட்டுவது கடினமாக இருக்குமாயின் கூரையின் உயரத்தைக் குறைத்தோ அல்லது நிலத்துக்கு மேல் கூரை வரக்கூடியவாறே அமைக்கலாம். கூரை அமைப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் கூட உங்களுக்கு எவை இலகுவாகக் கிடைக்கிறதோ அவற்றினையே பயன்படுத்தலாம்

(நாளை தொடரும்)

## இன்றைய பலன்

மாதம்- மாசி
திகதி- 12 [1986-2-24]
கிழமை- திங்கள்
திதி- பூரணை மு. இ. வரை
நட்சத்திரம்- மகம்
மு இ. வரை

மேடம்- அதிகாரக்குறைவிற்கு இடமுண்டு. அபாயகரமான தொழில் துறைகளில் ஈடுபடுவோர்கள் அதிக கவனம் வேண்டும், அவசர நடவடிக்கையைத் தவிர்க்கவும்

இடபம்- கனிவான சம்பவங்கள் நடைபெறும். காதலர்களுக்கு குஷியான தினம். சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறும்.

மிதுனம்- ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராதவிதமாகசிக்கலில்மாட்டிக்கொள்ள நேரிடும். நிதானம் வேண்டும்

கடகம்- நீண்டநாள் கனவு இன்று நனவாகும் பெரியவர்கள் உதவிக்கு வருவர்.புண்ணிய விருப்பு மேலிடும்,

சிங்கம்- கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும். எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள். சிலருக்கு நன்மையான இடமாற்றமுண்டு.

கன்னி- புதிய தொழில்கள் மூலம் இலாபம் கிடைக்கும் புத்திரர்களுடைய செல்வாக்கும் பெருகும் புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும்.

துலாம்- அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும் உடல் நலம் பாதிக்கப்படலாம். விளைபொருட்களினுல் பணம் விரயமாகும்.

விருச்சிகம்- எக்கருமத்தையும் எண்ணித்துணிக. அவசரப் போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரும் வணிகர்களாயின் அதிக முதலீட்டைத் தவிர்க்கவும்,

தனுசு-: இதயத்தைத் தைத் தொடும் சம்பவங்கள் இடம்பெறும் வாகன சாரதிகள் அவதானம் வேண்டும் தாய்வழிச் சுகமும் உண்டு

மகரம்- செய்தொழிற் சிறப்புக் குன்றும் எண்ணம் எது

(8-ம் பக்கம் பார்க்க)


# இடமாற்றம்

## பருத்தித்துறை குகன் ஸ்ருடியோ

10-2-86 முதல் மந்திகை கந்தமுருகேசனுர் சிலை சந்திக்கு கிழக்குப் புறமாகவுள்ள வீட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேம்.

A-286


## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/1787 இலக்க வழக்கில் வாதி யாழ்ப்பாணம் வேம்படிறேட் அந்தோனிப்பிள்ளை லுடிக்கன்ஸ் அவர்களுக்கு விற்பனவு திகதிவரை போகவேண்டிய தீர்வைத்தொகை 18575/- ரூபாவும் மேலும் இதில் 15,000/- ரூபாவுக்கு 23-11-1983 தொடக்கம் 5-12-1984 வரை வருடமொன்றுக்கு 36%வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் வழக்குச் செலவு 4730 ரூபா 30சதமும் விற்பனவுச் சலார்களும், இத்தொகையில் 6000/- ரூபா கழித்து மிகுதியைப் பிரதிவாதியாகிய யாழ்ப்பாணம் பாஷையூர் 2ம் குறுக்குத்தெரு வெலிச்சோர் அருளானந்தத்திடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1986ஆம் மார்ச் மீ 18 உ (18-3-86) காலை பத்துமணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### குறித்த ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவில்பற்று பாஷையூர் இறை 'சின்ன பெஞ்ஞான் வளவும் சின்னமெஞ்ஞான்' கந்தன் குடியிருப்பும் சின்னமெஞ்ஞான் தலைமடையும்'', இதில் வடக்குப்பக்கமாக நில. பர. குளி 17.15 இதிற்கெல்லை கிழக்கு றேட்டு, வடக்கு ஒழுங்கை, மேற்கு ஒழுங்கையும் யோசேப் சின்னராசாவும் பெண் பவுளராணிக்குமுரிய ஆதனம், தெற்கு அந்தோனிப்பிள்ளையும் பெண் பவுலோனியாவுக்குரிய ஆதனம் இக்குளி 17.15லும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் சு. பொ. நவரத்தினம் அவர்களால் 15-7-1977ம் திகதி 351ம் இலக்கத்துடன் வரையப்பட்ட படத்தின் பிரகாரம் துண்டு 3 என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதிக்காணி குளி 3 75 இதற்கெல்லை கிழக்கு குறிப்பிட்ட வரை படத்தில் துண்டு 2 எனப்பட்ட வெலிச்சோர் மிக்கேலினுதனமும் அதே படத்தில் 5 எனக் குறிப்பிட்டுள்ள 5 அடி கையொழுங்கையும் வடக்கு ஒழுங்கை மேற்கு ஒழுங்கையும் யோசேப்சின்னராசாவுக்கும் பெண் பவுளராணிக்குமுரிய ஆதனமும் தெற்கு குறிப்பிடப்பட்ட வரைபடத்தில் துண்டு 4எனப்பட்ட சூசைமுத்து கைம்பெண் பிராஞ்சிஸ்கா அல்லது யசிந்தாவின் ஆதனமும் வரைபடத்தில் 5எனப்பட்ட 5அடி கைஒழுங்கையும் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும், குறிப்பிட்ட வரைபடத்தில் 1என இலக்கமிடப்பட்ட வடகிழக்குக் காணியின் பங்காட்சியும் அதிலுள்ள கிணற்றில் பாவிப்புரித்தும்.

643, கே. கே எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்.
C-889


# திறப்பு விழா

## ★ சுப்றீம் அசோசியேற்ஸ் ★

185/6, நியூலலிதா கட்டிடம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**இன்று திங்கட்கிழமை 24-2-86**
**காலை 9-45 — 10-30 வரையுள்ள சுபவேளை**



★ விற்பனை: வீடியோ, ஓடியோ கெசட்டுகள், கலர்பிலிம்ஸ், வெளிநாட்டில் தயாரித்த உடுபுடவைகள் Ready-Made Garments (Imported) திறமான மலையக தேயிலை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சழிவு உண்டு.

★ வாடகை: இதற்கு முன் வெளிவராத தமிழ் - ஆங்கில வீடியோ படங்கள். மின் தியேட்டர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

★ சேவை: கலர்பிலிம்கள் ஐந்து நாட்களுக்குள் கழுவி பிரிண்ட் செய்து கொடுக்கப்படும். (Processing and Printing) பாஸ்போட் - விசா வெகு சீக்கிரத்தில் பெற்றுத்தரப்படும். (Passport விண்ணப்பப் பத்திரங்கள் கைவசம் உண்டு.) விமான ரிக்கட்டுகள் எந்த நாட்டுக்கும்.

Tudor Films Agent
ரியூடர் பிலிம்ஸ் ஏகவினியோகஸ்தர்

SUPPUREME ASSOCIATES
185/6, KASTHURIAR ROAD, JAFFNA.
C 931


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# உள்ளூராட்சித் தேர்தல் அமைதியாக நடந்தது

(சென்னை)

தமிழ்நாட்டில் நேற்று உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் அமைதியாக நடந்தன.

கிராமப்புறங்களில் எழுபது சதவீத வாக்குப்பதிவும், நகரப் பகுதிகளில் அறுபது சதவீத வாக்குப்பதிவும் நடைபெற்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் நேற்று சென்னை புறநகர், மனுபாக்கம் கிராமத்திலுள்ள வாக்குச்சாவடி ஒன்றில் தமது வாக்கைப் பதிவுசெய்தார்.

தமது மனைவியுடன் வருகை தந்திருந்த அவர் அமைதியான வாக்களிப்பு நடைபெற்றது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

கிராமப்பகுதிகளில் மிக அதிகளவில் தென்-ஆற்காடு மாவட்டத்தில் 75 வீத வாக்குகள் பதிவாகின. (ச)

# சிறுமியும் குழந்தையும் போத்தல் விளக்கிற்கு பலி

[யாழ்ப்பாணம்]

போத்தல் விளக்கிற்கு ஐந்து மாதக் குழந்தையும் 12 வயதுச் சிறுமியும் பலியானுள்!

யாழ். மரணவிசாரணை அதிகாரி க கேசவன் மரண விசாரணைகளை நடத்தினுர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த பி. இருதயராணி [12 வயது] யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரஜீப் இர்சாத் [5 மாதம்] ஆகியோரே பலியானவர்களாவர்.

12 வயதான இருதயராணி பெரிய தந்தை வீடடில் இருந்து வந்ததாகவும், பெரிய தாயார் லாம்புக்கு எண்ணெய் விடுவதற்கு மற்வருரு விளக்கை வெளிச்சம்தெரிய அருகில் பிடிக்குமாறு கூறியதாகரும், இருதயராணி விளக்கைப் பிடித்தபோது அவரின் சட்டையில் தீப்பற்றியதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

5 மாதக் குழந்தையான இர்சாத்தை சீலை ஏணையில் கிடத்திவிட்டு 4 வயதுப் பிள்ளைப் பார்க்கச்சொல்லி விட்டு தாயாரான கரீனு பேகம் கிணற்றடிக்கு துணிகள் கழுவச் சென்றபோது ஏணையை ஆட்டியபோது அது அருசிலிருந்த போத்தல்விளக்கில் பட்டு தீப்பிடித்து குழந்தை எரிந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

இரு மரணங்களும் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. [க]

## ‘அந்தக்’ குண்டை மக்கள் பார்வையிட்டனர்

[வண்ணார்பண்ணை]

உரும்பராயில் போர் விமானக் குண்டு வீச்சின்போது நிலத்துக்குள்ளிருந்து மீட்கப்பட்ட நாலடி உயரமுள்ள குண்டு, நேற்று யாழ். நகரில் பார்வைக்கு வைக்கப் பட்டது.

கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி சந்தியொன்றில் இக்குண்டு எட்டு அடி உயரத்தில் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தது.

ஏராளமான மக்கள் அவ்விடத்தில் கூடிநின்று பார்வையிட்டனர்.

இக்குண்டின் அருகில் தொங்கவிடப்பட்டுள்ள அட்டையில் இது அமெரிக்காவின் உற்பத்தி என்றும். 200 மீற்றர் தூரப் பிரதேசத்தை அழிக்கும் சக்தியுடையதென்றும், 55 கிலோ நிறையுள்ளதென்றும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகள் கைது!

[கொழும்பு]

மட்டக்களப்பில் வயலில் வேலைசெய்த பின்னர் வீடு சென்றுகொண்டிருந்த 7விவசாயிகள் சரடியனுறில்வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். [ய]

## நடவடிக்கைகளை மேற்கொள்ள நிரந்தர அமைப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிரந்தர அமைப்புஒன்று நிறுவ ஆலோசிக்கப் பட்டுள்ளது

வடபிரதேச தொழிற் சங்க கூட்டுக்குழு காரியாலயத்தில் நேற்றுக்காலை நடந்த கூட்டத்தில் இவ்வாறு முடிவு செல்யப்பட்டது.

வடபிரதேச தொழிற்சங்கக் கூட்டுக்குழு, பிரஜைகள்குழு, விழிப்புகுழு, அன்னையர் முன்னணி உட்பட பல பொது அமைப்புக்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டன. அடுத்தமாதம் 2ம் திகதிகாலை நிரந்தர அமைப்பு நிறுவப்படும். (க)

## தமிழீழ விடுதலை ராணுவம் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

பண்ணையில் ஆயுதப் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் பலியான எஸ். கணேசலிங்கத்துக்கு தமிழீழ விடுதலை ராணுவம் தனது இரண்டாவது அஞ்சலியைச் செலுத்தியுள்ளது.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கனகசபை

கரம்பொன் மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கனகசபை காலமானுர். அன்னுர் கொழும்பு V. G. சன்ஸ் உரிமையாளரும், கொழும்பு கலா றேடிங் கம்பனி முன்னுள் பங்காளரும், கொழும்பு கொம்பனித் தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் முன்னுள் தர்மகர்த்தா சபைத் தலைவரும், நாகம்மாவின் அன்புக் கணவரும், சுந்தரேசன் D. O. (கிளிநொச்சி), காலஞ்சென்ற மகேந்திரன், விஜயநாதன் (கலா றேடர்ஸ், கிளிநொச்சி), கிருபைநாதன் (ஜேர்மனி), கலாமோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கர்தப்பிள்ளை, காலஞ்சென்ற அம்பிகைபாகர், காலஞ்சென்ற கைலாசபிள்ளை, காலஞ்சென்ற பொன்னுமுத்து, அமிர்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுசீலா, விஜயலக்ஷ்மி, தனகேஸ்வரியின் அன்பு மாமனுரும், நவரெத்தினத்தின் மைத்துனரும், செந்தூரன், சேந்தன், சுதர்ஜனன், நவோதன், நிசாந்தி, நிரஞ்சி, தீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னரது ஈமக்கிரியைகள் 24-2-86 (இன்று) திங்கட்கிழமை மாலை3மணிக்கு கரம்பொன் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: சுந்தரேசன்

[C 926]

### S. K. அசோகநாதன் [சட்டத்தரணி]

S. K. அசோநாதன் (சட்டத்தரணி) காலமானுர். இவர் காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் S M S. கந்தசாமி [சுதுமலை], திருமதி பூமணி சந்தசாமி (BRUNEI) அவர்களின் புதல்வனும், மகாலக்சுமியின் அன்புக் கணவரும். மகிமாவின் அன்புத் தந்தையாரும், திரு. திருமதி இராசரத்தினத்தின் மருமகனும், காலஞ்சென்ற விமலசுரேந்திரன் (சட்டத்தரணி), சுலோசனு. இரஞ்சிதம், சரநாதன் (Engineer Brunei), மனமோகன் [illegible] ஆகியோரின் சகோதரனும், தனபாலசிங்கம் (மாவட்டக்கூட்டுறவுக் கணக்காய்வு உத்தியோகத்தர்), நவரத்தினராசா (இலங்கை வங்கி, கொழும்பு), இராஜினி (Brunie), அமிர்தவல்லி (யாழ் சுகாதாரத் திணைக்களம்), இராதாகிருஷ்ணன் (Australia), ஆனந்தர் (England), சூரியர் (England), ஞானசண்முகம் (England), Dr. மங்களேஸ் (England), ஞானேஸ் (England), சண்முகா, யோகேஸ் ஆகியோரின் மைத்துனரும், கோபி, முரளி, கிருஸ்ணு ஆகியோரின் அச்சா மாமாவும், பிரேமன், சத்யன் ஆகியோரின் சித்தப்பாவும், சேந்தன், அருணனின் பெரியப்பாவும் ஆவார். ஈமக்கிரியைகள் 24 - 2 - 86 (இன்று) மாலை 2-00 மணிக்கு ‘கோகுலம்’, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயில் நடைபெற்று பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: மனமோகன்

[illegible]

## யாழ். ஆஸ்பத்திரியில் சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்தியில் மின்கம்பத் தண்டனை விதிக்கப்பட்ட திலஹாமி ரஞ்சித்தின் சடலம் நேற்று நண்பகல்யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உடலெங்கும் இரத்தக் கறையுடன் காணப்பட்ட இச்சடலத்தை நேற்றுக் காலை மக்கள் பார்வையிட்டனர். இன்று மரண விசாரணைக்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென்று பொலிசார் தெரிவித்தனர்.

## உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம்

(வேலணை)

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இலங்கைக் கிளைத் தலைவர் திரு பொன். பூலோகசிங்கத்தின் தலைமையில் யாழ் கடைத்தெரு பாரதிபாஷா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர்கள் நடப்பாண்டு நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர் பொன். பூலோகசிங்கம்’ உபதலைவர் இ சற்குருநாதன், இணைச் செயலாளர்கள் செ. பரமானந்தம், ச. செந்தூர்ராசா, பொருளாளர் இ தவகோபால், துணைப் பொருளாளர் க. தேவதாசன் மற்றும் ஐந்து பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டதுடன் உதவி அரசாங்கப்பிரிவுகள்தோறும் ஒரு பிரதிநிதி [illegible] கள்.

## ‘றுகிங்’ தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையின் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

‘‘றுகிங் அத்துமீறல் சம்பவங்கள் பல்கலைக்கழக மாணவர்களைப் பாதித்திருந்தால் அவை தொடர்பான தகவல்களை நிர்வாகத்திடமோ அல்லது மாணவரவையிடமோ எழுத்துமூலம் தெரிவிக்கவேண்டும்’’ என்னும் தீர்மானம் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள கைலாசபதி கலையரங்கில் இக்கூட்டம் நடைபெற்றது

அண்மைக் காலங்களில் யாழ் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்கள்மீது றுகிங் அத்துமீறல் தொடர்பாக வெளியான தகவல்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டபோது இதுசம்பந்தமாக மாணவர் அவைக்கோ நிர்வாகத்திற்கோ எதுவித முறைப்பாடும் தெரிவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

‘‘பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் எச்சசொச்சமாக அமைந்த இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ‘றுகிங்’ சம்பவங்கள் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே இடம்பெற்று வந்துள்ளன. இந்தவகையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் இத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் கடந்த காலங்களில் ஈடுபட்டுவந்துள்ளதுபோல தொடர்ந்தும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்’’ என்றும் மாணவரவை உறுதியளித்துள்ளது.

மேலும் விசாரணைக்காகக் கொடுக்கப்பட்ட சம்பவங்கள் நிர்வாகத்தினுல் உடனுக்குடன் செயற்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பாக நிர்வாகம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மாணவர்கள் பூரண ஆதரவு வழங்கவேண்டும் என்னும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## இன்றைய பலன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் நடவாது. புத்திரர் வழியால் புகழுண்டு.

கும்பம்- திடீரென வரும் வியாதியால் வேதனைப்படுவீர்கள். எதிர்பாராத வரவுகளுக்குப் இடமுண்டு இன்று விழிப்புடனிருக்கவும்.

மீனம்- குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். குறுக்குவழித் தலையீடு தவிர்க்கப்படல் நன்று. இனசன விருததிக்கும் இடமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## இன்று அபிவிருத்தி கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழக இயற்கை விஞ்ஞான மன்றம் நடாத்தும் பயனுள்ள அபிவிருத்திக் கண்காட்சி இன்றும் நாளையும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சமூக பொருளாதார அமைபைக் கொண்டதாக இக்கண் [illegible] குறிப்பிடத் தக்கது.

இப்பத்திரிகை ‘‘ஈழநாடு’’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்- யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O Box 49. Telegram, Eelanadu, Telephone, [illegible] 24120.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org